# பிரச்சினையை தீர்க்கவே நாங்கள் மௌனமாக இருந்தோம்; ஆனல்! அரசிடம் திட்டமே இல்லை!

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

முரசு 2 29-12-85 ஞாயிறு (மார்கழி 14 ரபியு ஆகிர் 16) முழக்கம் 824

## ஸ்ரீமாவோ தரும் விளக்கம்

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்திடம் உறுதியான திட்டமெதுவும் இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அளுத்கமவில் நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினர். இப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவே இதுவரை காலமும் தமது கட்சி மௌனமாக இருந்தது எனவும் திருமதி பண்டாரநாயக்கா அங்கு தெரிவித்தார். எதிர்க் கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் இங்கு உரையாற்றினர். இதேவேளையில் இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக பொதுத் தேர்தல் நடத்துமாறு கோரி சுதந்திரக் கட்சி பொதுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக 'ஆல் இந்தியா றேடியோ'வின் இலங்கை நிருபர் அறிவித்துள்ளார். பாரதப் பிரதமரின் புதிய முடிவு பற்றி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவிக்கையில், "ராஜீவ் காந்தி தமக்குச் சரியெனப்பட்டதைச் செய்கின்ருர்" என்று சொன்னர்.

★ யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு அறிவிப்பு

# மட்டக்களப்பு 8 பேர் கொலை; பாதுகாப்பு படையினர் கூற்றில் உண்மையில்லை!

## கைதானவர் விபரங்களை அரச அதிபருக்கு அறிவித்திருந்தால் பிரச்சினை ஏற்பட்டிராது

(கொழும்பு)

கடந்தமாதம் 16-ம் திகதி மட்டுநகர் பார் வீதியில் ஆயுதப்படை, தீவிரவாதிகள் ஆகிய இரு பகுதியினருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் எட்டுப் பொதுமக்கள் பலியானதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்ததில் உண்மையில்லை எனவும், இதனை நேரில் கண்டவர்கள் அளித்த சாட்சியங்களில் உண்மையிருப்பதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்றுச் சமர்ப்பித்த மட்டக்களப்பு விஜய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மரணமான எட்டுப் பேரும் குண்டுவெடித்த இடத்தில் கிடந்ததாக படையினர் தெரிவித்ததற்கு ஆதாரம் எதுவுமில்லை யெனவும், சாட்சிகளின் பரிசீலனையின் படி குண்டு வெடிப்பு நடந்தவுடன் படையினரின் சூட்டுக்கு குறிப்பிட்ட எட்டுப் பேரும் மரணமாகியிருக்க முடியாதெனவும் குழு மேலும் தெரிவித்துள்ளது.

பிரஜைகள் குழுவின் செயலாளரும் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படைத் தளபதியும் கண்காணிப்புக் குழுவிற்கு அளித்த சாட்சியத்தில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும்,

...12ஆம் பக்கம் பார்க்க

## தேயிலையில் சைனைட்

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலைகளில் தமது தோழர்களால் சைனைட் நச்சு கலக்கப்பட்டு வருவதாக தமிழ் ஈழ ராணுவம் அறிவித்துள்ளது.

## மூதூர் தமிழ்கிராமங்களுக்கு வெளியார் செல்லத் தடை

(திருமலை)

மூதூர்ப் பகுதியிலுள்ள தமிழக்கிராமங்களுக்குள் வெளியூர் மக்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு நிரந்தரமாக வசிக்கும் பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் குடும்பம் குடும்பமாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே.

அடையாள அட்டைகள் வழங்கி முடியும்வரை வெளியார் எவரும் உள்ளே போதிய காரணம் காட்டி அனுமதி பெறாது செல்லக்கூடாதென தெரிவிக்கப்பட்டது. வெளியாரை உள்ளே செல்ல அனுமதிக்கக்கூடாதென பாதுகாப்புப்படையினருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அவசர அழைப்பு

ஹெலிகப்டர் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளின் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதி

... 12ம் பக்கம் பார்க்க

★ கற்பழித்த பின்னரே சுட்டதாகப் புகார்:

## மூதூரில் கடத்தப்பட்ட யுவதி சூட்டுக் காயங்களுடன் மீட்பு!

(திருமலை)

மூதூர் 64ஆம் கட்டையில் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணுமல் போன லாஸார் ரெலிஸியா என்ற மற்றப் பெண் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு திருமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவர்களின் முதலாவது ஆளான யோகேஸ்வரியின் சடலம் மீட்கப்பட்டதை ஈழமுரசு நேற்றே தெரிவித்திருந்தது.

காயத்துடன் தப்பிய ரெலிஸியா அளித்த தகவலின்படி தங்கள் இருவரையும் ராணுவம் அழைத்துவருமாறு சொன்னதாகக் கூறி, ஊர்காவற் படையினர் பலவந்தமாக அழைத்துச் சென்றதாகவும்,

—12ஆம் பக்கம் பார்க்க

## 2 பெண்களுக்கு தனித்தனி மரண.தண்டனை மட்டுநகரில்

(மட்டுநகர்)

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று இரண்டு பெண்களுக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு மட்டுநகர் ஞானசூரியம் சதுக்கத்திலும், மற்றவருக்கு செங்கலடியிலும் வைத்துத் தண்டனை வழங்கப்பட்டது. "காட்டிக்கொடுப்பவர்கள்" என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டதாம்.

இவர்களில் ஒருவரின் மக

—12ஆம் பக்கம் பார்க்க

முல்லைதீவில் நடந்த சம்பவம்

## பொலிஸில் தஞ்சம் புகுந்தவர் நள்ளிரவில் வாக்கிடோக்கி, எஸ்.எம்.ஜியுடன் தலைமறைவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்திருந்த நபரொருவர் அங்கிருந்த இயந்திரத்துப்பாக்கி, வாக்கி-டோக்கி போன்றவற்றுடன் மர்மமாகத் தலைமறைவாகி விட்டதாகத் தெரியவருகிறது.

தண்ணீரூற்றிலுள்ள பாண் பேக்கரி ஒன்றின் ஊழியரான இந்த நபரை சில இளைஞர்கள் விசாரணைக்காகவென அழைத்துச் சென்று நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டதையடுத்து அவர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புக்காக தங்கியிருந்தார்.

பொலிஸ் நிலையத்தின் பலத்த பாதுகாப்பு கண்காணிப்புத் தடைகளையும் மீறி அங்கிருந்த வாக்கி-டோக்கி இயந்திரத் துப்பாக்கி போன்றவற்றையும் எடுத்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு மர்ம

...12ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா 'கேசரி' நிருபர் நள்ளிரவில் கைதாகி விடுதலை

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினமிரவு வீட்டில் படுக்கையிலிருக்கும்போது ராணுவத்தால் கைதான வீரகேசரி நிருபர் பொ.மாணிக்கவாசகமும், அவரது சகோதரர்களும் நேற்றுப் பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

கோவிற்குளம் பகுதிக்கு நள்ளிரவு சென்ற ராணுவத்தினர் மொத்தம் பதின்மூன்று பேரைக் கைதுசெய்தனர். வவுனியா அரசாங்க அதிபர் எடுத்த முயற்சியைத் தொடர்ந்து நிருபரும், சகோதரர்களும் விடுவிக்கப்பட்டனர்.

## கண்ணிவெடி மீட்பு

அரிப்பு, கிண்ணியா ஆகிய இடங்களில் நான்கு நிலக்கண்ணிவெடிகள் ஆயுதப்படையினரால் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈழப்போரை முறியடிக்க லலித்தின் 5 அம்சத்திட்டம்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வரும் ஈழ விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள ஐந்து அம்சத் திட்டமொன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியினல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற

...12ஆம் பக்கம் பார்க்க

national weekly வாரமலர் விலை: ரூபா இரண்டு

## அந்தியேட்டிக் கிரியை

**அமரர் திரு. ஆ. கந்தையா அவர்கள்**

வசாவிளான் தெற்கு திரு. ஆ. கந்தையா கடந்த 30-11-85ல் காலமானர். இவர் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி, தியாகராசா, செல்வரத்தினம், சிதம்பர நடராஜா, சச்சிதானந்த சிவராசா (மின்சார சபை வட்டுக்கோட்டை) ஸ்ரீஸ்கந்தராஜா (அபிவிருத்திச்சபை உப அலுவலகம், மல்லாகம்) மகாராஜா, மகாதேவன் ஆகியோரின் தகப்பனுரும், 'சமூக இரத்தினம்' எம். கே. இளையப்பு, J. P. (ஓய்வு பெற்ற யாழ் கச்சேரி, அலுவலர்) திரு. எஸ். கணேசன் (அபிவிருத்திச் சபை உப அலுவலகம், ஏழாலை) ராசலட்சுமி, புஷ்பமலர், கமலாம்பிகை, கலாபவனி ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னாரது அந்தியேட்டிக்கிரியை இன்று (29-12-85) வசாவிளானில் நடைபெறும்.

தகவல்:-
எம். கே. இளையப்பு,
R/15229 யாழ்/மாவட்ட சமாதான நீதவான்.

## 10 கடைகள் விற்பனைக்கு

தெல்லிப்பழை காங்கேசன்துறை வீதியில், தபாற்கந்தோருக்கு அண்மையில் சகல நவீன வசதிகளான மின்சாரம், தண்ணீர், குளியலறை, கழிவறை கொண்ட 10 கடைகள் கட்டப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன. இவை சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

விள. இல,: B . 968
மே/பா: ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர், யோகூர் ஆகிய இடங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுச் செல்லும் பயணிகள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். முன்பு இல. 15, டேவிற் ரோட்டில் இயங்கிய எமது நிறுவனம் தற்போது புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**ALK**
78. லீனஸ் பில்டிங்,
சென் பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம்.
R/15225

## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள் 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (JOB CATEGORIES). உயர் தொழில் முதல் கூலி வேலை வரை. 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும் இலவச விமானச் சீட்டு, தங்குமிட வசதி கட்டணம் எதுவுமில்லை. விண்ணப்பப் பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முதலில் சுயவிலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**FOREIGN ASSIGNMENTS,**
**CHUNNAKAM.**

## A/L 86 Aug.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கான

## துரித மீட்டல் வகுப்புகள்

திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி
NOTES தரப்படமாட்டா
முற்ருக அச்சடிக்கப்பட்ட இலவச பாடக் குறிப்புகள்-
5 வருட வினுக்களுக்கு-விடை (Paper Class)

யாழ். நகரின் பிரபல ஆசிரியர்கள்:-

| | | |
|---|---|---|
| பொருளியல் | :- | திரு. கிருஷ்ணனந்தன் |
| கணக்கியல் | :- | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | :- | திரு. தேவா, திரு. ரட்ணம் |
| அளவையியல் | :- | திரு. யுகபாலசிங்கம் |
| தமிழ் | :- | திரு. நாகேஸ்வரன் |
| இந்து நாகரிகம் | :- | திரு. வேதா |
| | | மற்றும் பலர் |

**ஆரம்பம்: 1-1-86 (காலை 10 மணி)**

விபரங்களுக்கு:- நேரில் / தபாலில்

**ASTAN INSTITUTE**
166/, Hospital Road, P/920 Jaffna.


## நல்லூர் பிரதேச பாவனையாளர் குழு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கான பிரதேச பாவனையாளர் பாதுகாப்புச் சங்க பொதுக் கூட்டம் அண்மையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது. விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. கே. கே. மதிவதனனும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் - எஸ். சிவகுருநாதன், உபதலைவர் கலாநிதி எஸ் மோகனதாஸ், செயலாளர் - எம். மாணிக்கவாசகர், இணைச்செயலாளர் - ஏ. செல்லத்துரை, பொருளாளர்- வி. என். செல்வரத்தினம், என் கிருஷ்ணராசா, என். கனகராசா, பி. கனகசபாபதி, எஸ். அருமைநாயகம், ரி கே. சங்கரலிங்கம், என். யோகராசா ஆகியோரைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## ஜனவரியில் புதிய வகுப்பு ஆரம்பம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஶ்ரீமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அடுத்த வருடம் முதல் ஏழாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புஆரம்பமாகவிருக்கிறது. இதற்கான அனுமதியினை கல்வியமைச்சு வழங்கியுள்ளது.

தற்போது இவ்வித்தியாலயத்தில் ஆரும் ஆண்டுவரையே மாணவர்களுக்குக் கல்வி புகட்டப்படுகிறது. இவ்வித்தியாலயப் பெற்ருேர்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்றுக் கல்வியமைச்சு ஏழாம் ஆண்டுக்கான (ஆரும் வகுப்பு) வகுப்பினை நடத்துதற்கு அனுமதி கொடுத்துள்ளது.

புங்குடுதீவு கல்வி வட்டாரத்தில் இப்பாடசாலையில் மட்டுமே ஏழாம் ஆண்டு மாணவர்களுக்கான புது வகுப்பினை ஆரம்பிக்கக் கல்வியமைச்சு அனுமதித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

(ஒட்டுசுட்டான்)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வவுனியாக் கச்சேரியில் கிராம ஒருங்கிணைந்த அபிவிருத்தித்திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி சந்திரஞானம்மா சிவசம்பு அவர்கள் முல்லைத்தீவுக்கச்சேரி திட்டமிடல் பிரிவுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

வவுனியாக் கச்சேரியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமை ஆற்றிய திருமதி ஆர். மகேந்திரன் யாழ்ப்பாணக் கச்சேரிக்கும் திரு. எஸ். சிவபாதசுந்தரம் மன்னர்க் கச்சேரிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

## முற்பணம் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அரசாங்க ஊழியர்களுக்கு வருடத் தொடக்கத்தில் வழங்கப்படும் விசேட முற்பணம் இந்தவருடம் தொடக்கம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலத்தில் 300 ரூபா வீதம் வழங்கபயட்டுவந்தது.



## பிறந்தநாள் வாழ்த்து

✻ மல்லாகம், சந்திரசேகரன் மோகனகௌரி தம்பதியின் மகன் ரஜீபன் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

✻ யாழ். ஸ்ரான்லி வீதி, இராசதுரை வசந்திரா தம்பதியின் மகன் உதயராஜ் இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✻ நாவற்குழி. செல்வராஜா யசோதராணி தம்பதியின் மகள் ரேணுகா இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ சுன்னகம், சபாபுஷ்பநாதன் சரோஜினிதேவி தம்பதியின் மகள் ஜனனி இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ பாஷையூர், தேவதாசன் தவபுஷ்பம் தம்பதியின் மகள் டயானு ஐந்தாவது பிறந்த நாளை கொண்டாடுகிருர்.

✻ கொக்குவில் மேற்கு லோகேஸ்வரன் குணபூஷணேஸ்வரி தம்பதியின் மகள் வாசுகி ஆருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ மீசாலை வடக்கு, விக்கினேஸ்வரன் நல்லம்மா தம்பதியின் மகன் றஜீபன் ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✻ உடுவில், ஜீவரட்ணம் அன்னம்மா தம்பதியின் மகள் ரஜனி இன்று தனது பதின்மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

## இளைஞர் குழு தலையீட்டினுல் தொல்லை களைவு

(சுழிபுரம்)

கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் பெரும் தொல்லையைக் கொடுத்து வந்த சட்டவிரோத மின்பாவனை இப்போது குறைந்துள்ளது. இளைஞர் குழு ஒன்று எடுத்த தீவிர நடவடிக்கையே இந்நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சட்டவிரோத மின்பாவனையால் ஏற்படும் அபாயம் பற்றி இவர்கள் மேற்கொண்ட தீவிர பிரசாரமே இவ்வாறு நன்மையளித்துள்ளது.

## சுழிபுரத்திற்கு புதிதாக மின்மாற்றி

(சுழிபுரம்)

சுழிபுரத்தில் சுமார் ஏழரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள புதிய மின்மாற்றிக்கான அடித்தளம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான நிலத்தைச் சுழிபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அப்பகுதி மக்களின் உதவி மூலம் பெற்றுள்ளது.

இம் மின்மாற்றி அமையும் படசத்தில் சுழிபுரம் மேற்கு, நெல்லியான், இருத்தலடி போன்ற இடங்கள் மின்சாரத்தைப் பெறும் வாய்ப்புக் கிடைக்கும். இன்னும் ஓரிரு மாதங்களில் இவ்வேலைகள் பூர்த்தியடையும என்று தெரிவிக்கப்படுகிறது.

## புனரமைப்பு

(சுழிபுரம்)

வட்டுக் கோட்டை முதலி கோயிலடியில் உள்ள நீர்விநியோகத்திட்டத்தை இளைஞர் குழு ஒன்று புனரமைத்துக் கொடுத்துள்ளது. பசுமைப் புரட்சி, விவசாயிகளின் நீர்த் தேவை பூர்த்தி ஆகியன இதன் மூலம் இப்பகுதி மக்களுககுக் கிடைத்துள்ளன. இளைஞர்களின் இப்பணி குறிதது மக்கள் பாராட்டுத்தெரிவித்துள்ளார்கள்.

## நிர்வாகிகள்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை 751-ம் இலக்கத் தனியார் பேருந்து சேவைச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்ற போது தலைவராக திரு. அ. பரமதருவும், செயலாளராக திரு. ச. வைத்தியநாதனும், பொருளாளராக திரு. து. இராமச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். இருவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## நல்ல காரிய வேளையிலும்.....

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓடுத் தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் குழந்தைகளுக்கான ஆரம்ப பாடசாலை வளர்ச்சிக்காக ரி. வி. டெக் மூலம் சினிமாப் படம் காட்ட ஏற்பாடாகியது.

அப்போது இவை ஆயுத முனையில் கொள்ளையடிக்கப் பட்டதாகத் தெரிவிக்கபபடுகிறது.

## தென்னுபிரிக்க....

... 3ம் பக்கத் தொடர்

எதிர்கட்சித் தலைவருக்கு எங்கே தெரியப் போகிறது: அதனுல்தான் போலும் அவர் 'ஒப்பு நோக்கி'ப் பேசினுர்.

இந்தவியவஸ்தைகெட்டவிவகாரங்களுக்கு அப்பால் தென் ஆபிரிக்க நிலைமை ஆழமான அரசியல்பிரச்சனையைத் தோற்றுவித்து வருகிறது. அஹிம்சாமூர்த்தி மகாத்மாஜியின் வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்திய தென் ஆபிரிக்க மக்கள், அந்தப் பாதை கடந்த பல தசாப்தங்களாகப் பயன் தராததால் இன்று ஆயுதப் போராட்ட வழியில் இறங்கத் தலைப்பட்டுள்ளனர்.


'ஆயிரக்கணக்கில் மக்கள் இறநதாலும், அதைப்பொருட்படுததாது தென் ஆபிரிக்காவில் வன்முறைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம். நாம் ஆயிரக்கணக்கில் மக்களை இழக்கக்கூடும், பெருமளவு சேதங்கள் ஏற்படக் கூடும்' என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வைத்தே கூறுரைத்துள்ளார்.

நிறவெறி அரக்கத்தனத்தை எதிர்த்து நடக்கும் இநத அறப் போராட்டத்தை (இது வன்முறை வடிவத்தை பெற்ருலும் கூட அறப் போராட்டம் அறப் போராட்டமே) 'பயங்கரவாதம்' என்று தென் ஆபிரிக்க ஆளும் வர்க்கத்துடனும், தச்சர் அம்மையார் உட்பட 'உயிர்காக்கும்' மொஸாட்டுகளுடனும் சேர்ந்து ஶ்ரீலங்காவின் ஆளவந்தோரும் ஆர்ப்பரிக்கப் போகிருர்களா?


## சவூதி அரேபியா பயண ஒழுங்குகள்

STNEO TYPIST, SHAWEL OPERATOR

உடனடித் தொடர்பு:
அலங்கார் ஏஜென்சீஸ்
1. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
B 969




# தென்னாபிரிக்க ஆட்சியும் தென்னிலங்கை ஆட்சியும்

தென் ஆபிரிக்காவில் வீறு பெற்றுவரும் விடுதலைப் போராட்டம் பிரிட்டோரிய ஆளும் கும்பலை ஆட்டம் காணச்செய்து வருகிறது. அத்துடன் அவர்களின் அனைத்துலக கூட்டாளிகளையும் அது அதிரச் செய்துள்ளது.

பஹமாஸில் அண்மையில் நடந்த காமன்வெல்த் மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் அம்மையாரை இந்தப் போராட்டம் திணறடித்தது. 'இரும்பு மங்கை' என வாணிக்கப்படும் இவர் தனது ஆளுமையின் கீழ் உள்ள பொதுநல அமைப்பிலேயே 'விழி பிதுங்க' வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட பெருவாரி அங்கத்தவ நாடுகளின் அரசுத் தலைவர்கள் தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சியாளர்களை எரிசரமாகச் சாடினர். தென் ஆபிரிக்கா மீது தடைகளைக் கொண்டுவர வேண்டும் என்று ஓங்காரக் குரலில் கோரினர்.

ஆனால் தனது தென் ஆபிரிக்க 'சகாக்களை' அம்போ என்று கைவிட தட்சர் அம்மையார் சாதுர்யமாக மறுத்து விட்டார். தனது சாணக்கியத் தந்திரங்களைக் கையாண்டு 'ஸாங்ஷன்' நடவடிக்கை எடுக்கப்படுவதை ஆறு மாதங்களுக்கு ஒத்திப் போடச் செய்வதில் தற்காலிக வெற்றியும் பெற்றார்.

பஹமாஸில் வெள்ளையர் நிறவெறி ஆட்சிக்கு முக்குக் கொடுக்க முனைந்த வெள்ளைக்கார அம்மாவின் பக்கம் எமது நாட்டின் ஐயாவால் பகிரங்கமாகவே முன்வர (உள்ளூர அரித்தாலும்) முடியவில்லை. என்றாலும் காரசாரமாக நடந்த விவாதங்களின் போது இவர் 'பெருமனது' பண்ணி பெரும்பாலும் 'வாய் பொத்தி' மௌனம் சாதித்தார். இந்தியாவுக்கே காந்தி மகாத்மாவின் போதனைகளை 'மீள்' நினைவுபடுத்திச் சொல்பவரல்லவா? அண்ணலின் 'மௌனவிரதம்' சமயசஞ்சீவியாக நினைவுக்கு வந்து சிக்காராக மாட்டிக்கொண்டது போலும்.

**நேர் நோக்கு**

**சுந்தர்ஜி**

இவரது இரங்கத்தக்க நிலையைப் புரிந்து கொள்வதில் ஒன்றும் கஷ்டமில்லை. ஒன்று பாரம்பர்யமாக (உதிரத்தோடு ஊறிப்போன) பிரிட்டிஷ் விசுவாசத்திற்கு ('இலங்கை ஒரு குட்டி லண்டன்' என்று இவரது சகாவான முன்னாள் மகா தேசாதிபதி பெருமை பீத்தியது இங்கு நினைவு கூரத்தக்கது) எதிராக இவரால் போக முடியவில்லை. அதேபோல அம்மையாரைப் பகிரங்கமாக ஆதரிக்கவும் முடியவில்லை காரணம் ஜனநாயகம் மனித சமத்துவம், அணிசேராமை பற்றிய 'பதிவிரதா' மாய்மாலம் மட்டுமல்ல 'Birds of the same feather flock together' என்ற ஆங்கிலப் பழமொழியை நினைவுபடுத்தி, இவரது ஆட்சிக் காலத்தில் மூன்று தடவைகள் நடத்திமுடிக்கப்பட்ட இனப்படுகொலைகளை அத்தாட்சி சகிதம் யாராவது எடுத்து விளாசினால் என்ன செய்வதாம் என்ற தவிப்பு.

அது மட்டுமல்ல. சுயநிர்ணய உரிமை கோரிநிற்கும் தமிழினத்தை 'சர்வ சம்ஹாரம்' செய்யச் சதிராடும் நவீன நாகாசுரங்களின் பிரதம கூட்டாளிகளாக இன்று இருப்பது அரச பயங்கரவாதத்தின் கொத்தளங்களாகச் செயற்படும் இஸ்ரேலின் ஆதிக்க வெறியர்களும், தென் ஆபிரிக்காவின் இனவாதிகளுமே. இஸ்ரேலுக்கு அடுத்து தென் ஆபிரிக்காவிடமிருந்தே (அமெரிக்கா பிரிட்டோரியா மூலமே ஆயுதங்களை அனுப்புகிறது). இலங்கை பெருந்தொகையான பயங்கர ஆயுதங்களை இறக்குமதி செய்கிறது. ('பயங்கரவாதத்தை ஒழிக்க பிசாசன் பாட்டனுடன் கூட சேர நான் தயார்' - ஜே ஆர்.) அத்துடன் யூ. என். பி. ஆட்சிப் பீடமேறியபின் தென் ஆபிரிக்காவுடனான இலங்கையின் வர்த்தகம் பெருமளவில் அதிகரித்துள்ளது. (தென் ஆபிரிக்காவுக்குச் சென்ற இலங்கையின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்த வீராப்பையும் மறந்து) 1977க்கும் 1984க்குமிடையில் தென்ஆபிரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதி இரண்டு மடங்காக (2014 லட்சத்திலிருந்து 5547 லட்சம் ரூபாய்கள் பெறுமதி) அதிகரித்துள்ளது. ('ஐலண்ட்' -27. 10. 85).

இலங்கை இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அகற்றியதால் தென் ஆபிக்காவிடமிருந்து பெறப்படும் இறக்குமதிகள் பெரும் பாய்ச்சலில் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கை ஒன்று மௌன மொழியில் கூறுகிறது. 1978 இல் 1004 லட்சம் ரூபாய்களாக இருந்த இது 1984 இல் 5179 லட்சங்களை அடைந்தது. அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகை ஆயுதங்களையும் சேர்த்தால் இறக்குமதியின் மொத்த மதிப்பு பெருமளவு கூடுதலாக இருக்கும்.

ஆறுமாதத்திற்குள் தென் ஆபிரிக்க ஆட்சியாளர் தமது இனவெறி அட்டூழியங்களை நிறுத்திக் கொள்ளாவிட்டால் என்ன செய்ய உத்தேசிக்கிறீர்கள் என ஜனாதிபதியிடம் கேட்டபோது ''தேயிலை ஏற்றுமதியை நிறுத்துவது ஏழைக் கறுப்பு மக்களைப்பாதிக்காது என நான் திருப்திப்பட்டால் அந்த நடவடிக்கையை எடுப்பதுபற்றியோசிக்கலாம்' என்று (அசல் தட்சர் பாணியிலேயே) பதிலிறுத்தார்.

இந்த அரசியல் பம்மாத்துக்களை நோக்கும் போது இலங்கையை தென்ஆபிரிக்காவுடன் ஒப்பிட்டு ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருந்தது இங்கு நினைவிற்கு வருகிறது. அது பற்றி ஸ்ரீ லங்கா அரசு ஆத்திரத்தில் குதித்ததும், ஆஸ்திரேலிய கன்ஜர்வேடிவ் அரசினர் ஏதோ சொல்லி 'சமாளித்ததும்' சுவாரஸ்யமான சங்கதிகள்தான். ஆனால் இவர்களின் தென் ஆபிரிக்கக் கூட்டாளிகள் இனப்படுகொலையைப் பொறுத்தவரை வெறும் கற்றுக் குட்டிகளே. அங்கு ஆர்ப்பாட்டங்களில், போராட்டங்களில் ஈடுபடுவர்களே ஆயுதப்படைகளின் மிலேச்சத்தனமான அடக்குமுறைக்கு இலக்காகிறார்கள். ஆனால் தாக்கிய போராளிகளை விட்டுவிட்டு (நெருங்க தொடை நடுக்கம்) ஒன்றுமறியா அப்பாவிகளை பச்சிளங் குழந்தைகளையும் கிழங்களையும் கூட-கொன்று குவிக்கும் 'வீராதிவீரம்' அவர்களுக்கு அத்துபடியாகாது என்பது பாவம் ஆஸ்திரேலிய

(2ஆம் பக்கம் பார்க்க)

★ இன்றைய இலக்கியப் பிரச்சினை

# சங்கச் சான்றோர் பாடல் எளிமையானவையா?

★ செல்வ திருக்குமாரன்

எளிமை என்பதற்கு வரைவிலக்கணம் தேடி மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளும் இதேவேளை இதுவரை வந்த 'எளிமை'களின் பேரால் ஏற்பட்டுள்ள இலக்கியத்தில் - பாடத்திட்டம், கவிதை, கட்டுரை, விமர்சனம் முதலிய இன்னோரன்ன துறைகளில ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிச் சிந்தித்தல் யாவருக்கும குறைஞ்சபட்சப் பலனையாவது கொடுக்கும் என நம்பலாம்.

மொழி ஒரு ஊடகம். அதாவது ஒருவர் சொல்லுவதையோ எழுதுவதையோ விளங்கிகொள்ள அல்லது புரிந்துகொள்ளத் துணை புரிவது. மொழிச் சிக்கனத்தின் உயிர்க் கூறு தான் எளிமை. ஆனால் அச்சிக்கனத்தைக் கடைபபிடித்து எழுத முற்படும்போது சில நவீன கண்டுபிடிப்புகள் ஆய்வுகள் பற்றி விளக்க முற்படும்போது அந்த எளிமைத்தன்மை தானாகக் கழன்று போயிருப்பதை அவதானிக்கலாம். இதனால் புதுக்கலைச்சொற்கள் பிறப்பெடுக்கின்றன. ஆகவே எப்போதும், எடுத்ததெல்லாவற்றுக்கும் நாம் எளிமை என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகின்றது.

எளிமையான மொழிநடையைக் கையாண்டு மு. வ., பாரதி, கல்கி, கவிமணி தேசிக விநாகம்பிள்ளை போன்றோர் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதாகக் கூறியபோதும், திருக்குறள், கம்பராமாயணம், ஏன் சங்கத்துச் சான்றோர்களின் பாடல்கள் எளிமை இன்மை காரணமாக இன்று படிக்கப்படாமல் விளங்கிக் கொள்ளப்படாமல் மறைந்து போய்விட்டனவா? இல்லையே. திருக்குறளையும், திருவாசகத்தையும் தாமாகவே இன்று விளங்கிக்கொள்ளக் கூடிய மொழியாற்றல் செம்மையும், சொல்வளமும், பயிற்சியும நாளுக்கு நாள் வாசகனிடமும் மாணவனிடமும் கூட வளர்ந்து கொண்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

அன்றாடவாழ்வில் மக்கள் தொடர்புச் சாதனங்களாகிய வானொலி, தொலைக்காட்சி, சினிமா, பத்திரிகை, சஞ்சிகை முதலியனவும், புதியகல்விக் கொள்கை பாடத்திட்டம், ஆதியனவும் விநாடிக்கு விநாடி மனிதனது சிந்தனையையும், மாணவனது அறிவையும் அதீத வேகநிலையில் கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

சாதாரண ஐந்து வயது மழலை முதிராத பாலகன் கூட வேற்று மொழிச் சொற்களைப் புரிந்து கொண்டு பிரயோகிப்பதை சர்வசாதாரணமாகக் காணக்கூடியதாகவுள்ளது. ரெலிவிஷன், றேடியோ, பெல், சையனைற், கிரனைற், றொக்கட் லோஞ்சர் போன்ற சொற்பிரயோகங்கள் யார் கற்பித்து வீட்டிலிருக்கின்ற பல்லுப் போன பாட்டிவரை புழங்குகின்றனர். ஆகவே எளிமை பற்றிய பாதிப்பைப் பற்றிக் கலைத்துறைகளுடன் மட்டும் இணைத்து தொடர் புறுத்திப் பாராது அறிவியல் துறைகளையும் சேர்த்துக் கொண்டு நாம் கொஞ்சம் கடுமையாக யோசிப்போமாயின் நல்ல முடிவுக்கு வருவது சுலபமாகும்.

இலக்கணநூலார் தமிழ்ச் சொற்களை இயற்சொல், வடசொல், திசைச்சொல் என்றெல்லாம் வகுத்துள்ளனர். இயற்சொல்லில் எழுதப்படுபவை சிரமமின்றிப் புரிந்து கொள்ளும்படி பொருள் தருவன. தமிழ் தொன்றுதொட்டு ஒரு பொருள்குறித்த இயல்பான சொல். வடசொல்லையும் திசைச் சொற்களுள் அடக்கி விடலாம். திசைச்சொற்களாவன வேறு திசைகளிலிருந்து வந்து எமது மொழியோடு சேர்ந்து கொண்டவை. ஆங்கிலம், பிரெஞ்சு, மலையாளம், தெலுங்கு முதலிய மாவட்ட அல்லது பிராந்திய மொழிச் சேர்க்கையும் திசைச் சொற்களாகின்றன. பாடவிதானம் முதல் விளம்பரம் வரை இவை விரவிப் பயின்று வருகின்றபோது வற்றின் கலப்பால் இருந்... வந்த கடுமை அன்றாட பாவனை காரணமாக எளிமையாகி விடுவதைக் காணலாம். அதாவது இயற்சொற்களைப் பிரயோகிப்பதனால் அமையும் படைப்பு எளிமையானதாகவும், திசைச் சொற்கள் விரவிவர எழுதப்படும் ஆக்கம் (கையாண்ட சொற்கள் புழக்கக்குறைவு காரணமாக) கடுமையானதாகவும் அமைந்து நாளாவட்டத்தில் வாசகர்மட்டத்தில் எளிமை எய்துகின்றன.

ஒரு குறுகியவட்டத்துக்குள் நின்று கொண்டு கையிருப்பிலுள்ள சில சொற்களை மட்டும் வைத்துக் கொண்டு சித்து வித்தை காட்ட முயலுவதனால் மொழி வளர்ச்சியையோ மனவளர்ச்சியையோ ஏற்படுத்தி விடமுடியாது. அவ்விதம் நாம் நினைத்துக் கொண்டு இருட்டடிப்புச் செய்துவிட முயலுவது சூரியவெளிச்சத்தைக் குடையால் மறைத்துக் கொண்டு வெயிலை நிறுத்தி விட்டேன் என்று கூறுவதையே ஒக்கும். நாம் விரும்பியோ, விரும்பாமலோ மொழியிலும், மொழிநடையிலும் காலத்துக்குக் காலம் இத்தகைய கடுமைத்தன்மை தோன்றி அது தானாகவே எளிமைத் தன்மை அடையும். இது இயல்பான ஒருவிதி. அதிலும் இன்று புதிய கண்டு பிடிப்புக்கள், விஞ்ஞானக் கல்வி, போக்குவரத்துச்சாதனங்கள், மக்கள் தொடர்புச்சாதனங்கள், நாகரிகமோஸ்தர்கள் எல்லாம் மொழியையும் அதன் போக்கையும், கல்வியையும் மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மாற்றத்தின் தவிர்க்கமுடியாத ஊடுருவலே இக்கடுமைத்தன்மை. ஆனால் அக்கடுமை தெளிவின்மை ஓர் நிரந்தரமானதல்ல.

தேவையும் தேவைக்கான அவசரமும் அதன் உபயோகமும் தானாகவே அதிவேகமாக; இந்தக் கடுமைத்தன்மையை எளிமையாக்கி விடுகின்றது. கலை, இலக்கியக் கோட்பாடுகளுக்கும் இவ்விதி பொருந்துவதை வாசகர்கள் நிச்சயமாக உணர்வார்கள்.

கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★

## இந்தியர்களின் வேகம் தினசரி 36000 பிரசவம்

இந்தியர்கள் வேகம் நிறைந்தவர்கள். அண்மையில் இலங்கையில் நடந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் போட்டிகள் இந்த உண்மையை உணர்த்தின. தற்பொழுது எமது ஜனாதிபதி கூட இந்தியா நினைத்தால் குறுகிய காலத்தில் இலங்கையை கைப்பற்றி விடலாம் என்று கூறுவது கூட இந்த வேகத்தன்மையை காட்டுகின்றது.

ஆனால் இன்னொரு விடயத்திலும் இந்தியர்கள் வேகம் கூடியவர்களாகவே இருக்கின்றார்கள். அதுதான் சனப்பெருக்கம் இன்று இந்தியாவின் சனத்தொகை உலகின் மொத்த சனத்தொகையின் ஆறில் ஒரு பங்கு. 2000ம் ஆண்டளவில் 1000 மில்லியன் அதாவது 100 கோடியை இத்தொகை எட்டிப்பிடிக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு நிமிடத்திலும் 25 மேலதிக இந்தியர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள். இக்கணக்கின்படி நாளொன்றுக்கு 36,000 இந்தியர்கள் உதயமாகின்றார்கள். வருடம் ஒன்றுக்கு இந்திய சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு அவுஸ்ரேலியாவின் மொத்த சனத்தொகைக்கு சமனாகும்; அதாவது ஒரு கோடி முப்பது இலட்சமாகும்.

### கடத்தல் இனிமேல் கஷ்டம்

## பெட்டிகளை சோதனையிட ஒரு புதுமையான கருவி

இன்று விமானத்தில் பயணம் செய்வோரை நன்கு சோதிக்க வேண்டியதன் அவசியத்தை அனைவரும் வலியுறுத்துகின்றனர். பயணிகளில் சிலர் வெடிகுண்டுகளை விமானத்திற்குள் எடுத்துச் சென்று விமானம் புறப்பட்டபின் மிரட்டுகின்றனர். சிலர் கைத்துப்பாக்கியை எடுத்துச் சென்று விமானியை மிரட்டி விமானத்தைக் கடத்திச் செல்லுகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளைத் தற்காலத்தில் நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம்.

இதைத் தவிர்க்க பயணிகளின் பெட்டிகளை விமான நிலையத்தில் விரைவாகச் சோதனையிடும் ஒரு கருவியை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். பெட்டிகள் கன்வேயர் பெல்ட்டில் (Conveyorbelt) வைத்து அனுப்பப்படுகின்றன. இந்தப் பெலிட்டின் மேலே எக்ஸ் கதிர்க் கருவி ஒன்று ஒரு தாங்கியில் தொங்க விடப்பட்டிருக்கும்.

பெலிட்டில் பெட்டிகள் செல்லும் போது பெட்டிக்குள் இருக்கும் எல்லாப் பொருள்களின் படங்களும் பக்கத்து அறையில் உள்ள திரையில் பெரிதாக விழும். துணியிலோ, தோலிலோ, வேறு பொருள்களிலோ மறைத்துவைக்கப்பட்டிருக்கும் பொருள்களின் விம்பங்களும் திரையில் தெளிவாக விழுகின்றன.

— உதயசந்திரன்.

## தொலை பேசி தரும் பதில்

பல நாடுகளிலும் யாராவது தொலை பேசியை கையில் எடுத்து எண்ணைச்சுழற்றினால் மறுபக்கத்தில் இருப்பவர் றிசீவரை எடுக்காவிட்டால் ஒரு வகைச் சத்தம் எழும். ஆனால் மேற்கு ஜேர்மனியிலோ றிசீவரை எவரும் எடுக்காவிட்டால் "தயவு செய்து கொஞ்சம் பொறுங்கள்" என்று ஜேர்மன் பாஷையில் பதில் கிடைக்கும். அங்குள்ள தொலை பேசிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒலிப்பதிவு நாடாவே இவ் வேலையை கச்சிதமாக செய்கின்றது.

## ஹோ - கீ ஹோ - கீ ஹொக்கி

ஹொக்கி என்ற பெயர் எப்படிப் பிறந்தது? திட்டமாகத் தெரியவில்லை. இதோ ஒரு புதிய விளக்கம். 1740ஆம் ஆண்டில் சில பிரஞ்சு பிரயாணிகள் வட அமெரிக்காவில் உள்ள சென். லோறன்ஸ் பள்ளத்தாக்கு வழியாகச் சென்றபோது, அங்கு ஒரு கூட்டம் இராக்கோயி இந்தியர்கள் ஆளுக்கு ஒரு கோலைக் கையில் வைத்துக்கொண்டு, தரையில் கிடந்த ஒரு பொருளையும் ஒருவரை ஒருவரும் கூட உற்சாகமாக அடித்து ஆடுவதைக் கண்டனர். அடிபட்டவர்கள் அடிக்கடி 'Ho-gee! Ho-gee! என்று உரக்கக் கத்தினார்கள். அப்படி என்றால் பின்னரே தெரிந்தது "வலிக்கிறது! வலிக்கிறது!" இதிலிருந்தே ஹொக்கி வந்தது.

### ★ குஷ்வந்த்சிங் விட்டபகிடி

## சந்திரனுக்கு செல்வதற்கு இரண்டு லட்சம்ரூபா

சந்திரனுக்கு றொக்கெட்டை அனுப்ப இந்தியா முடிவு செய்தது. றொக்கெட்டில் யாரை அனுப்புவது?

இதற்காக ஒரு தேர்வுக் குழு நியமிக்கப்பட்டது. நேர்முகப் பேட்டி நடந்தது.

முதலில் ஒரு வங்காளி வந்தார் 'எனக்கு ஒரு லட்சம் ரூபா கொடுத்தால் போதும்; சந்திரனுக்குச் செல்ல நான் தயார்" என்றார் அவர்.

'ஒரு லட்சரூபாய் எதற்கு?' என்று கேட்டார் தேர்வுக் குழுத்தலைவர். 'என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு' என்று பதில் வந்தது.

அடுத்து ஒரு சர்தார்ஜி வந்தார் அவர், இரண்டு லட்சம் ரூபா வேண்டும் என்றார். 'ஒருலட்சரூபாவை இங்குள்ள என் குடும்பத்தினருக்குக் கொடுப்பேன். மீதி ஒரு லட்சத்தை சந்திரனுக்கு என்னுடன் கொண்டு சென்று, அங்கு ஏதாவது வியாபாரத்தில் முதலீடு செய்வேன்.'

மூன்றாவதாக ஒரு மார்வாரி வந்தார்.

'எனக்கு மூன்று லட்சம் கொடுத்தால் போதும்' என்றார்.

'மூன்று லட்சம் எதற்கு?'

'தேர்வுக் குழு தலைவராகிய உங்களுக்கு ஒரு லட்சம், எனக்கு ஒருலட்சம், மீதி ஒரு லட்சத்தை அந்த வங்காளிக்குக் கொடுத்துச் சந்திரனுக்கு அனுப்பிவிடுவேன்'!

## பெண்களுக்கு விடுதலை ஆண்களால் கிடைப்பதா?

பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல.

எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா?

எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா?

எங்காவது முதலாளிகளால் தொழிலாளிக்கு விடுதலை உண்டாகுமா?

இதையெல்லாம் யோசித்தால் இதன் உண்மை விளங்கும்.

அப்படி ஒருகால் ஏதாவது ஒருசமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகி விட்டாலும் கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.

(தந்தை பெரியார் சொன்னது)

## பத்துப் பிள்ளைகள் பெற்றால் வீரத்தாய்

அண்மையில், காஞ்சிபுரத்தில் நான்கு தாய்மார்களுக்கு ரூபா ஐந்நூறு பரிசும், 'வீரத்தாய்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

'இந்து முன்னணி'யினர் உருவாக்கியிருந்த இந்தப் பரிசுத் தொகையையும், பட்டத்தையும் வழங்கியவர் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி ஸ்வாமிகள்.

எதற்காக இந்தப் பரிசும் பட்டமும்?

அந்தத் தாய்மார்கள் நால்வரும் பத்து அல்லது பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்றவர்கள் என்பதனாலேதான்!

### நம்பலாம்! நம்பலாம்! நம்பலாம்!

## இப்படியும் ஒருநாட்டுப்பற்று

இந்திய மாநிலங்களுக்கிடையிலான றஞ்சித் கோப்பை கிறிக்கெட் போட்டி நடந்து கொண்டிருந்தது. ஹைதராபாத் அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தது. பந்துத் தடுப்பு அணியின் பெயரைக் குறிப்பிடாமல் விடுவதே நலம்.

ஹைதராபாத் அணியின் முன்னணி ஆட்டக்காரர் அசோக் அப்பொழுது விளாசித்தள்ளிக் கொண்டிருந்தார். அவரது தனிப்பட்ட ஓட்ட எண்ணிக்கை 447 ஐ நெருங்கி விட்டது. எதிர் அணி சிந்தித்தது. இன்னும் ஒரு ஓட்டம் என்றால் முதல்தர கிறிக்கெட்டில் சாதனை புரிந்த அவுஸ்ரேலிய வீரர் டொனால் பிரட்மனின் சாதனையை ஹைதராபாத் அணி வீரர் அசோக் முறியடித்து உலக சாதனையை புரிந்து விடுவார். அப்போது அவரது சாதனை குறிக்கப்படும் பொழுது அவர் எந்தக் குழுவிற்கு எதிராக இந்த ஓட்டங்களை பெற்றார் என்பதும் குறிக்கப்படும். இவ்வாறு குறிக்கப்பட்டால் தமது அணி வெட்கித்தலைகுனிய வேண்டிய நிலை.

எதிர் அணியின் தலைவர் நடுவரிடம் சொன்னார்; 'போட்டியை நிறுத்துங்கள். நாங்கள் ஹைதராபாத் அணிக்கே வெற்றியை விட்டுக் கொடுக்கின்றோம். ஆனால் அந்த விளையாட்டு வீரன் உலகசாதனை புரிவதை அனுமதிக்க மாட்டோம்.' போட்டி நிறுத்தப்பட்டது.

உலகசாதனையைப் பற்றி ஏங்கித்தவித்த அசோக்கின் எண்ணங்கள் சுக்குநூறாகின. அவனது எண்ணங்கள் மட்டுமல்ல ஒரு புதிய சாதனையை இந்தியன் புரியப்போகின்றான் என்ற இந்தியர்களின் மகிழ்ச்சி, இந்தியர்களிடையே சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று காந்தி கண்ட கனவுகள் அனைத்துமே சுயநலம் கொண்ட அந்த எதிர்மாநில அணியினால் சுக்குநூறாகின. இது நடந்தது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு.

## மணிக்கட்டில் செவிப் பொறி

சிறிதளவு கூடக் காது கேட்காதவர்களும் ஒலியைத் துல்லியமாக உணர்ந்து கொள்வதற்கு உதவும் புதுமையான கருவியொன்று ஜேர்மனியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது இந்தச் சிறிய கருவியைக் கைக் கடிகாரம் போல் மணிக்கட்டில் கட்டிக்கொண்டால் போதும், ஒலிகள் இந்தக் கருவியில் மோதி அதிர்ந்து நுண்ணிய அலைகளாக மணிக்கட்டு வழியே மூளையை எட்டுகின்றன. அதன் மூலம் அந்த ஒலிகளை துல்லியமாக உணர்ந்து கொள்ள முடியும். காது கேட்காத குறையை முழுமையாக அகற்றிவிடும் இந்தக் கருவி பிறவியிலேயே செவிடர்களாக இருக்கும் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப் பெரிதும் துணை புரியும். இக் கருவி ஒலி அலைகளின் அதிர்வைக் கொண்டு ஒவ்வொரு ஒலியையும் இனம் கண்டு கொள்ளவும் உதவுகிறது.

கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★ ஞாயிறு கதம்ப அமிர்தம் ★

இவ்வாரக் கதையமுதம்

★ ஆபிரிக்கச் சிறுகதை

# மழை வந்தது

வெளியே முற்றத்தில் உற்சாகத்தோடு உறவினர்கள் நடனமாடிய வண்ணமிருந்தனர். அவர்கள் ஆடியபடியே அவள் இருந்த குடிசையை அண்மிவந்த வேளையில் அவர்களின் பாட்டின் பொருள் அவளுக்கு தெளிவாய் விளங்கியது 'மககளைக் காப்பதற்கும் மழையை வரச் செய்வதற்கும் ஓஜெண்டா, ஏரிக்க ரக்குப் போவதாயிருந்தால் போகட்டும், அவள, தன் மக்களுக்காகவும், மூதாதையர்களுக்காகவும் சாவதாய் இருந்தால் சாகட்டும்.' 'இவர்கள் என்ன சொல்கிறார்கள் இவர்களுக்குப் பைத்தியமா? அல்லது ஓஜெண்டாவிற்குத்தான் பைத்தியம் பிடித்து விடடதா? ஏன் அவள் ச கவேண்டும்.'

ஓஜெண்டாவின் வழியை மறைத்துக் கொண்டு அவளின் பாட்டி, குடிசையின் வாயிலில் நின்றாள். ஓஜெண்டாவால் வெளியிற்போக முடியவில்லை. பாட்டியின் முக பாவத்திலிருந்து அவளின் பேர்த்தி வெளியிற் செல்வது அபாயம என்பது தெளிவாகப் புலனாயிற்று. ஓஜெண்டா தாயை அழைத்த வண்ணம், 'இது என் திருமணவிஷயம் இல்லையா?' என்று உரத்துக் கேட்டாள். பதில் இலலை. திடீரென்று வெறிபிடித்தவள் போலப் பாட்டியைத் தள்ளிக் கொண்டு வெளியிலே செல்ல அவள் முயன்றாள்; கூடவில்லை. ஓஜெண்டா தனது வாழ்வுக்காகப் போராடவேண்டிய கட்டம் வந்துவிட்டது. இனிப் பொறுத்தல் இயலாது. அவள் வெறிகொண்ட பெண்புலி போலப் பாட்டியைத் தள்ளி வீழ்த்தி விட்டு வெளியே பாய்ந்தாள்.

அங்கு துக்க நேரத்தில் தரிக்கும் ஆடை அணிந்து லபொங்கோ நின்று கொண்டிருந்தார். அவர் எதுவுமே பேசவில்லை. அவர் கைகளைப் பின்புறமாகக் கட்டியவண்ணம் சிலை போலக் காட்சியளித்தார். ஓஜெண்டா அவரின் அருகில் ஓடிச்சென்ற பொழுது, அவர் மௌனம் கலைந்தது. மகளின் கைகளைப் பற்றியபடி அவளின் தாய் கிடந்த இடத்திற்கு அவர் அவளை அழைததுச் சென்றார்; நடக்கப்போவதை உத்தியோக பூர்வமாக வெளியிட்டார். மூன்று சீவன்களும் அந்தக் குடிசையின் இருளிலே தாமும் தமது சோகமுமாகச் சில விநாடிகள் புதைந்து போயின. பேசக்கூடிய நேரம் அல்ல அது. பேசமுயன்றாலும் ஒருவரின் வாயிலிருந்தும் சொற்கள் வெளிவர மறுத்தன. கடந்த காலத்தில் அவர்கள் மூவரும் அடுப்பின் மூன்று கற்கள் போல விளங்கியவர்கள். ஒரு கல்லை எடுத்துவிட்டாலும் பானையை அதன் மேல் வைத்தல் இயலாது. வாழ்வே பாழ்தான்.

தலைவர் ஓஜெண்டாவின் மகள், மழை பெய்ய வைப்பதற்காக இறக்கப் போகும் செய்தி காற்றுப்போல எங்கும் பரவிவிட்டது. சூரிய அஸ்தமன வேளையில் உறவினர்களும் நண்பர்களும் ஓஜெண்டாவைப் பாராட்ட வந்து குழுமலாயினர். இன்னும் பலர் தமது பரிசிற் பொருள்களுடன் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஓஜெண்டாவின் தனிமையைப் போக்கி உற்சாகமூட்ட முற்பட்டனர். பகல் வரும்வரை ஒரே ஆட்டமும் பாட்டுமாய் இருந்தன. பெரியதொரு விருந்துக்கான ஆயத்தங்கள் நடந்தன. சமூகம் வாழ்வதற்குப் பலிச்சீவனாக ஓஜெண்டா தெரியத் பட்டது. அவளுக்குக் கிடைத பெருங்கௌரவம் என்று உறவினர்கள் நம்பி, அதற்காக அவளைப் பாராட்டு முகமாகவே இந்த விருந்து. "ஓஜெண்டாவின் நாமம் எங்களிடையிலும் எங்கள் பரம்பரைகளினிடையிலும் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்" என்று அவர்கள் நினைத்துப் பெருமைப்பட்டனர்.

பெண் ஒருத்திக்கு அவளின் மகள் இத்தகைய கௌரவத்தைப் பெறுவது உண்மையிலே பெருமிதத்துக்கு உரியதுதான் ஆனல் தன் ஒரேமகள் காற்றில் அடிக்கபபட்டுச் செல்வதுபோலச் சடுதியில் மறைந்து போவது பெரியலாபந்தானா? இந்த நாட்டிலே பெருந்தொகையான பெண்கள் இருக்கிறார்களே? அவர்களையெல்லாம் விடுத்துத் தன் மகளைமட்டும் தெரியவேண்டுமா? தன் ஒரே செல்வமகளை இழந்த பின் வாழ்வதில் என்ன அர்த்தம் இருககிறது? மற்றைய வீடுகளெல்லாம் பெண்களால் நிறைந்துகிடக்க ஓஜெண்டாவின் தாய் மட்டும் தன்வீட்டிலே பிள்ளையின்றிச் சூனியத்தில் உழலத்தான் வேண்டுமா? நினைக்க நினைக்க அந்த தாயின் மனம் வெந்து கருகியது.

முகில்களற்ற வானத்தில் சந்திரன் பூரண பிரபையுடன் ஒளிகான்றவண்ணம் இருந்தான். முதியோரும் இளையருமான பெண்களும் ஆண்களும் ஓஜெண்டாவின் முன்பு நடனம் ஆடக் குழுக்களாகத் திரண்டு நின்றார்கள். ஓஜெண்டா தன் தாயின் அருகில் அமர்ந்து விம்மியபடி இருந்தாள். இவ்வளவு காலமாகத் தன் உறவினர்களுடன் கலந்து பழகி அவர்கள் பற்றி நன்கு விளங்கிகொண்டதாக நினைத்திருந்தது எவ்வளவு தவறு என்பது ஓஜெண்டாவிற்கு இப்பொழுதுதான் விளங்கியது. உண்மையில் இவர்கள் அவளை நேசித்திருந்தால் இன்று சிறிதுகூட அநுதாபம் அற்றவர்களாய் நடந்து கொள்வார்களா? அவளைக் காப்பாற்ற ஒரு சிறிய முயற்சியாவது மேற்கொள்ளாதிருப்பார்களா? இவர்கள் இளம் வயதிலே இறப்பதன் கொடுமை பற்றிச் சிறிதாவது எண்ணிப் பார்க்கவில்லையே!

தனது வயதினரான இளம் பெண்கள் ஆடத்தொடங்கிய போது ஓஜெண்டாவால்விம்மலை அடக்கமுடியவில்லை. 'இவர்கள் இளமையின் தலைவாயிலில் நிற்கிறார்கள். விரைவில் இவர்களுக்குத் திருமணம் நடக்கும்; தொடர்ந்து பிள்ளைகளும் பிறக்கும். தங்களை நேசிக்கும் கணவர்கள், தங்களுக்கெனக் குழந்தைகள் என்று பெற்று மகிழ்ச்சியில் மிதப்பார்கள்." இவ்வாறு நினைத்தபொழுது ஓஜெண்டாவின் சிந்தனைத் திரையில் ஒசிண்டா தோன்றத் தொடங்கியது இயற்கையே. அவன் இந்தக் கூட்டத்தில் இருக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள். ஆனல் அவன் அங்கு காணப்படவில்லை. எங்கே போனான்? ஒருவேளை நோய்வாய்ப்பட்டு விடடானோ? அந்த வேளையில் ஓஜெண்டா தனது இடையைச் சுற்றியிருந்த சங்கிலியை நெருடி அதில் ஓர் அலாதியான இன்பத்தை அடைந்தாள்.

அடுத்தநாட்காலை பெரு விருந்து ஒன்று இடம்பெற்றது. எத்தனையோ வகையான உணவுகள் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்தன. ஓஜெண்டா விரும்பியவற்றையெல்லாம விரும்புமளவு சாப்பிடலாம். பார்க்கும் பொழுதே நாவை ஊறவைக்கவல்ல சுவையுடைய பண்டங்கள் தாம், ஆனல் ஓஜெண்டா அவற்றில் ஒன்றையும தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. மகிழ்ச்சிமிக்க மக்கள் அவற்றை உண்டனடும் அவள் நீர்த்துருத்தி ஒன்றில் நிறைக்கப்பட்டிருந்த தண்ணீரைப் பருகுவதில் திருப்தியடைந்தாள்.

ஓஜெண்டா விடைபெற்று நீங்கும நேரம் சமீபித்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவளைப் பொறுத்தவரையில் பெறுமதி வாய்ந்ததுதான். ஏரியை அவள் சென்றடைய ஒருநாள் முழுவதும் பயணம் செய்ய வேண்டியிருக்கும். இரவு முழுவதும் நடந்து காடொன்றைக்கடக்க வேண்டும். அதனைக் கடக்கையில் அங்குள்ள காட்டுவாசி ஒருவன் கூட அவளைத் தீண்டமாட்டான்.

மூலம்:
கிறேஸ் ஏ. ஒகோட்
தமிழில்:
சொக்கன்



அவள் தனது உடலில் புனிதமான தைலத்தைப் பூசியிருந்தாள். தனது முடிவுபற்றிய துன்பச் செய்தியைக் கேள்வியுற்றதிலிருந்து ஒவ்வொரு கணமும் ஓஜெண்டா தன்னைக் காணவருவான் என்று அவள் எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள். ஆனல் அவனை எங்கும் காணவில்லை. அவன் தனிப்பட்டதொரு பயணத்தை மேற்கொண்டுள்ளதாக உறவினள் ஒருத்தி அவளுக்குச் சொன்னாலும், அவனைக் காணவேண்டும் என்ற ஆவல் அடக்கமுடியாததாய் இருந்தது. இறப்பதற்குமுன் ஒசிண்டாவைக் காணக் கிடைக்கா விட்டால் அதைவிடத் துரதிர்ஷ்டம் வேறில்லை

மத்தியான வேளையில் ஓஜெண்டாவின் வீட்டுக் கேடடடியில் உறவினரும் நண்பரும் கடைசிமுறையாக அவளுக்கு தமது பிரியாவிடையைக் கூறி அவளை வழியனுப்பிவைத்தார்கள் அவளின் தாய் அவளது கழுத்தைக் கட்டிக்கொண்டு நெடுநேரம் அழுதாள். தந்தை துககஉடையுடன் கேட்வரைவந்து பிரியாவிடையை கூறிவிட்டு மற்றவர்களுடன் கலந்து மறைந்தார். அவ்வாறு பிரிவதற்கு முன் அவர் தமது கையில் அணிந்திருந்த காப்பினைக் கழறறி மகளின் கையில் அணிந்தவராய், "நீ எப்பொழுதும் எங்களுடன் இருப்பாய் எமது முதாதையரின் ஆவிகள் உன்னோடு என்றும் இருக்கும்" என்று கூறினர்.

நாவடைத்துப் போய் நம்பிக்கை இழந்த நிலையில் ஓஜெண்டா தன்மக்கள் முன்பு நின்றாள். அவள் பேச எதுவும் இருக்கவில்லை. கடைசிமுறையாகத் தனது வீட்டை நோக்கினாள். அவளின் இதயம் மிகுந்த வேதனையுடன் படபடவென்று அடித்துக் கொண்டது. அவளின் சிறு பராயத்துத் திட்டங்கள்யாவும் ஒரு முடிவுக்கு வந்து விட்டன. மலர் ஒன்று அதன் கணுவோடு பிடுங்கப்பட்டுச் சாலைப் பொழுதின் பனித்துளியோடு சேர்த்து மண்ணில் வீசப்பட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு உண்டாயிற்று. அழுது கொண்டிருக்கும் தன் தாயைப் பார்த்து ஓஜெண்டா இவ்வாறு கூறினாள். "என்னைக் காண நினைக்கும் பொழுதெல்லாம் அஸ்தமிக்கும் சூரியனை உற்றுப்பார் அங்கு நான் இருப்பேன்".

ஓஜெண்டா தென்மேற்குச் திசைநோக்கித் திரும்பியவளாய்த் தன் பயணத்தைத் தொடங்கினாள். அவளின் பெற்றோர், நண்பர்கள், உறவினர் யாவரும் அவள் செல்லும் பாதையிலேயே விழிபதித்து நின்றனர், அவளின் மெலிந்த நெடிய அழகிய உருவம் சிறிது சிறிதாகி காட்டின் வற்றல் மரங்களிடையே சென்று மறைந்து போயிற்று.

தனிமையில் நடந்து செல்கையில் ஓஜெண்டா தன் தனிமைக்குத துணையாக ஒரு பாடலைப் பாடலானாள். அவளின் சொந்தப்பாடல்.

நான் இறக்க வேண்டுமென
என்முன்னோர்கள் சொன்னார்கள்
'தலைவரது மகள்மாளவேண்டு'
மென்ப தவர் கூற்று

## இரண்டாம் பகுதி

வாவியில்வாழ் தெய்வம்என்றன் தசை சுவைக்கும் வேளையிலே
மாபெரிய மழையிந்த மண்ணில் பொழிந்திடுமாம்
ஆம் அதுவே உண்மை இந்த மண்மழைநீரால் நிரப்பும்
காற்றுச் சுழன்றடிக்கும் கடுமிடியும் கர்ச்சிக்கும்
மணல் நிறைந்த தரையையெலாம் மழைவெள்ளம் மூழ்கடிக்கும்
வாவியிலே தலைவனது மகளிறத்தல் என்பதனை
என்வயதே கொண்ட இளைஞரங் கீகரித்தார்
அன்பார்ந்த பெற்றோரும்
அதைஏற்றுக் கொண்டார்கள்
"இறக்கட்டும் எம் ஓஜெண்டா எமக்குமழை தருவதற்காய்'
என்வயதோர் இளமையினர் இனிமுற்றிக் கனியாகி
மனுஷிகளாய் மாதாக்களாகி யிங்கு வாழ்கையிலே
ஓஜெண்டாவோ இளமையினில் மரணத்தை அரவணைப்பாள்
அவள்தனது முன்னோர்கள் அருகிற் சயனிப்பாள்
ஆம், இனியிம் மண்ணில் அரியமழை பெய்யுமன்றோ?

அஸ்தமன சூரியனின் செந்நிறக் கிரணங்கள் ஓஜெண்டாவைத் தழுவுகையில், அவள் வானத்தின நடுவிலே எரிவதோர் மெழுகு திரிபோலக் காட்சி தந்தாள்.

ஓஜெண்டாவின் பாடலைக் கேட்க அவளைத் தொடர்ந்து வந்தவர்களின் உள்ளங்கள் உருகின. ஆனல் அவர்கள், "மக்களை காப்பதாக இருந்தால், மழையை வருவிப்பதாயிருந்தால், நீ பயப்படவேண்டியதில்லை. உனது நாமம் எங்களிடையே என்றும் வாழும்" என்று கூறினார்கள்.

இரவு வந்தது. ஓஜெண்டாவைக் களைப்பும் சோர்வும் ஆக்கிரமித்தன. அவளால் தொடர்ந்து நடக்கக் கூடவில்லை. அவள் ஒரு மரநிழலி அமர்ந்து தான் கொண்டுவந்த நீர்த் துருத்தியிலிருந்து நீர் பருகினாள்; பின்னர் அந்த மரத்தின் வேரிலே தலையைச் சாய்த்துச் சிறிது நேரத்தில் நித்திரையாகிவிட்டாள்.

காலையில் அவள் எழுந்த பொழுது சூரியனின் கதிர்கள் மேலெழத் தொடங்கியிருந்தன.

பல மணித்தியாலங்கள் நடந்தபின் நாட்டின் சனசஞ்சாரமற்ற பகுதிக்கு, அண்மையில் வந்து சேர்ந்தாள். இப்பகுதியினுள் நுழைந்த எவரும் உயிருடன் திரும்பியதில்லை. ஆவிகளோடு நேரடித் தொடர்பு கொள்ளக் கூடியவர்கள் மட்டுமே கடவுளால் இங்கு அநுமதிக்கப்படுவார்கள். ஆனல் இன்று மாலையாவதற்கு முன்பு ஏரிக்கரையை ஓஜெண்டா அடைய, அவள் அந்தப் பிரதேசத்தைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# காதல் உறவின் உச்சத்தில் கடவுளைக் காட்டிய இன்பச்சாமியார் ரஜனீஷ்

★ அரியாலையூர் வி. என். எஸ். உதயசந்திரன்

**பகவான் ரஜனீஷ் என இனி அழைக்கலாமா?**

இந்தியாவிலுள்ள இயற்கை எழில் சூழ்ந்த பூனவில் ஆச்சிரமம் ஒன்றை தொடங்கி மேல் நாட்டவர்களை காந்தம் போல இழுத்த சுவாமி ரஜனீஷைப் பற்றி கேள்விப்பட்டிராதவர்கள் இப்போது இருக்கமாட்டார்கள். சிற்றின்பம் வழியாகப் பேரின்பத்தை அடையமுடியும். காதல் உறவின் உச்சகட்டத்தில் தான் கடவுளைக் காணமுடியும் என்பது ரஜனீஷ் சுவாமியுடைய சித்தாந்தம.

ரஜனீஸ் உலகப் புகழ்பெற்ற சாமியார். இவர் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். தத்துவத்தில் பட்டம் பெற்று கல்லூரி ஒன்றில் ஆசிரியராக பணியாற்றி வந்தவர். சிற்றின்பம் வழியாக பேரின்பம்' என்ற புதிய தத்துவத்தின் மூலம் ஆயிரக்கணககான பணக்கார இளைஞர்களையும் யுவதிகளையும கவர்ந்து இழுத்து தன் வலைக்குள புகுததிக் கொண்டவர். இவர் இனிமையாகவும் கவர்ச்சியாகவும் பேசக் கூடியவர். இவர் தனது கவர்ச்சிகரமான சொற்பொழிவுகளால் பலரை தம் வசம் இழுத்துச் சீடர்களாக்கிக் கொண்டார். உலகம் முழுவதிலும் இவருக்கு 5,00,000 சீடர்கள உளளனர் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

சுவாமி தனது ஆச்சிரமத்தில் வாழ தனது சீடர்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் விதிபபதில்லை. ஆண்களும் பெண்களும் எப்படியும் பழகலாம். எபபடி வேண்டுமானலும் வாழலாம்.

இதனுல் பல ஆயிரக் கணக்கான வெளிநாட்டவர்களை மட்டுமல்ல பல ஆயிரக்கணக்கான இந்தியர்களும் இந்த ஆச்சிரமததில் சேர்ந்தார்கள். இவரின் சீடர்களில் பலர் மிகவும் பணக்காரர்களாவர். இவர்கள் சுவாமிக்கு பணம் பணமாகக் கொடுத்தார்கள். சுவாமிக்கு கோடிக்கணக்கில் பணம் குவிந்தது. இந்த ஆச்சிரமத்தை அவருடைய சீடர்கள் சொர்க்க புரி என அழைத்தார்கள்.

இவருடைய ஆச்சிரமத்தில் ஒழுக்கம்கெட்ட செயல்கள் நடக்கின்றன. ஆண்களும் பெண்களும் தகாத முறையில் நடந்து கொள்கிருர்கள். போதை வஸ்த்துக்களை கடத்தி வந்து விற்கிருர்கள். இந்த கடத்தல் பொருட்களின் விற்பனை மூலம் பணம் திரட்டுகின்ருர்கள். ஆச்சிரம கணக்குகளை சரியாகக காட்டாமல் வருமானவரித் திணைக்களத்தை ஏமாற்றுகிருர்கள் என்று இந்திய அரசுக்கு தகவல் கிடைத்தது இந்த ஆச்சிரமத்தில் நடந்த சம்பவங்களை இந்திய அரசின் இரகசிய பொலீஸ் பிரிவு விசாரணை செய்ய முற்பட்ட போது, திடீரென ஒரு நாள் தனது சொந்த விமானத்தில் தனது பிரதம சிஷ்யை மா ஆனந்த் ஷீலா என்ற பெண்ணுடனும் மற்றும் சில சீடர்களுடனும அமெரிக்காவுக்கு தபபி ஓடினுர்.

இவர் அமெரிக்கா சென்ற செய்தி கேட்ட அவருடைய பக்தர்கள் ஆத்திரமடைந்தார்கள்.

இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற ரஜனீஷ் அமெரிக்காவின் போர்ட்லண்ட மாநிலத்தில் ஒரிகன் என்ற சிறிய நகரத்தில் புதிய ஆச்சிரமத்தை நிறுவினுர். அந்த ஆச்சிரமம் 64,100 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் அமைக்கப்பட்டது. அந்த ஆச்சிரமத்தை சுற்றிலும் முள்வேலி போடப்பட்ருந்தது முக்கியமான பல டங்களில் டெலிவிசன் கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. முள்வேலி முழுவதும் மின்சாரம் பாய்ச்சசப்பட்டிருக்கும். ஆச்சிரமத்தைச் சுற்றி சீடர்கள் பலர் துப்பாககிகளோடு காவலில் ஈடுபட்டிருப்பார்கள். அமெரிக்காவில் அமைக்கப்பட்ட இந்த ஆச்சிரமத்தைப் பார்ப்போர் இது என்ன இராணுவ முகாமா என்று வாய்விடடே கேட்கத் தோன்றும். மிகவும் பாதுகாப்பாகவே தனது ஆச்சிரமத்தை அமைத்தார். இதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா! ஆச்சிரமத்திற்குள் சீடர்களும் பக்தர்களும் தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் அமைக்கப் பட்டிருந்தன.

ரஜனீஷ் சுவாமியைத் தேடி உலகம் முழுவதிலும் இருந்து படை எடுத்தார்கள். இப்படை எடுப்பிற்கு காரணம் தான் என்ன? மன அமைதிக்காகவும் உல்லாச வாழ்க்கைக்காகவும் தான் அங்கே படை எடுத்தார்கள் ரஜனீஷ் சுவாமியின் காலடியில் பணத்தைக் கொட்டினுர்கள்.

ரஜனீஷ் ஆச்சிரமத்தில் சில கட்டுப்பாடுகள் இருந்தன. அதாவது காவியுடையுடன் ரஜனீஷ் உருவப்படம் அமைந்த சங்கிலியும் அணியவேண்டும் என்பதே அந்தக் கட்டுப்பாடுகளாகும். இக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. இதனுல் பலர் சினிமா நடிக, நடிகைகள் போல காட்சி தந்தனர்.

ரஜனீஷ் ஆச்சிரமத்தை மா. ஆனந்த் ஷீலா தான் நடத்தி வந்தார், அங்கே வரும் பக்தர்களுக்கு ரனீஷ் சுவாமியுடைய சொற்பொழிவுகள் ரேப்பில் ஒலி பரப்பப் பட்டன. இந்த சமயம் ரஜனீஷ் சுவாமி எங்கே என்ற கேள்வி எழுப்பப் பட்டது. சுவாமி மௌன விரதம் இருந்து வருகிருர் என்று ஷீலா விடம் இருந்து பக்தர்களுக்கு பதில் கிடைத்தது.

மா. ஆனந்த் ஷீலா சுவாமியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர். இவர் சொல்வதை பக்தர்கள் என்றுமே தட்டியதில்லை. இவர் சொற்படியே எல்லாம் நடக்கும்.

இவர் ரஜனீஷ் சுவாமியைப் பற்றியும் ஆச்சிரமங்களைப்பற்றியும் பேட்டிகளும் பிரசங்கங்களும் செய்து வந்தார். இந்த பிரசங்கங்களின் விளைவாகஆச்சிரமத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சீடர்கள் சேர்ந்தார்கள். இதனுல் பணம் கோடிக் கணக்கில் சேரத் தொடங்கியது. இந்த ஆச்சிரமத்தை 'ரஜனீஷ்புரம்'; என்று அழைக்கத் தொடங்கினுர்கள். ரஜனீஷை பகவான் என்று அழைத்தார்கள்.

ரஜனீஷ் தமக்கு கிடைத்த கோடிக் கணக்கான வருமானத்தின் மூலம் சாமியார்களிலேயே மிகப்பெரிய பணககாரர் என்ற பெயரைப் பெற்றுர். இவர் சொந்தமாக பல விமானங்களையும் விலை மிகுந்த கார்களையும் வைத்திருந்தார். இவை எல்லாம் பக்தர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டவைகளாகும்.

ரஜனீஷ் சாம்பிராச்சியம் சமீபத்தில் அவுஸ்திரேலியாவிலும் பரவியது. மேற்கு அவுஸ்திரேலிய வில் பெம்பெற்றேன் (PEMBETRON) என்ற நகரில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள பள்ளத்தாக்கை ஒட்டி கிராமத்து நிலத்தை வளைத்து ஆச்சிரமம் அமைத்தார். இந்த கிராமம் அவரது கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடுமோ என ஊர்மக்கள் பயந்தார்கள். ஆயிரக் கணக்கில் சீடர்களை குடியேற வைத்துஊரையே தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது தான் ரஜனீஷ் வழக்கம்.



அமெரிக்காவில் ஒரிகன் நகரில் உள்ள ரஜனீஷ் புரத்தில் 90க்கும் அதிகமான ரோல்ஸ் ராய்ஸ் கார்களுடனும் பல விமானங்களுடனும் பலமான பாதுசாப்புக்களுக்கும் மத்தியிலே ஆட்சி செலுத்தி வந்தவர்தான் இநத ரஜனீஷ்.

இவர் ஆச்சிரமத்தில் இருந்தபோது இவரை சந்திக்கச் செல்கின்றவர்கள் ஏகப்பட்ட சோதனைகளுக்குப் பிறகே அவரைப் பார்க்க அனுமதிக்கப் படுவார்கள். சந்திக்கச் செல்கின்றவர்களின் உடையில் சிறு தூசியும் இருக்கக் கூடாது என்பதற்காக தூசு சுத்தம் செய்யும் நவீன கருவிகள் மூலமாக உடைகளைச் சுத்தம் செய்வார்கள். அதன் பிறகே அவரை சந்திக்க உள்ளே அனுமதிக்கப் படுவார்கள். ரஜனீஷ் சுவாமிக்கு ஆஸ்த்மா நோய் இருப்பதால் தூசு இவருக்கு ஒத்து வராது,

ரஜனீஸ் சுவாமி அதிகமாக பேசுவதுமில்லை, நடப்பதுமில்லை, அவரது ரோல்ஸ் ராய்ஸ் கார்களில் போய் விடுவார். நாளுக்கு நாள் புத்தம் புதுக் கார்களிலே பயணம் செய்வார்.

ஆச்சிரமத்தில் அவரது சொற்பொழிவுகள் ரேப்பில் ஒலிபரப்பப்படும் சீடர்கள் அவரது சொற்பொழிவுகளை கேட்டு மெய்மறந்து ஆடு மாடுகளைப் போல நடந்து கொள்வார்கள், மது அருந்துவார்கள், போதை வஸ்துக்களை உண்பார்கள் நிர்வாணமாக சுற்றுவார்சள். இவை எல்லாம் செய்ய சுதந்திரம் வழங்கப் பட்டிருந்தது. இந்த ஆச்சிரமம் நிம்மதி இன்றி தவித்த பலரை கவர்ந்து இழுத்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

இந்த ஆச்சிரமத்தையும் அங்கு நடைபெறும் சகிக்க முடியாத முறைகேடுகளையும் கண்டு பொறுக்க முடியாமல் அமெரிக்க மக்கள் எதிர்த்தார்கள். இந்திய ஆச்சிரமத்தில் நடந்த ஒழுக்கக் கேடுகளை போல இங்கும் நடந்தன. கடத்தல் போதைப் பொருட்கள் விடயம் எலலை மீறிப் போய்விட்டன. அமெரிக்க பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. அமெரிக்க இரகசியப் பொலிசர் ரஜனீஷ் பக்தர்கள் போல ஆச்சிரமத்திற்குள் புகுந்து துப்பறியத் தொடங்கினுர்கள்.

இந்த இக்கட்டான நிலை தனக்கு ஏற்பட்டிருப்பதை உணர்ந்த ரஜனீஷ் வாய் திறந்து பேசத் தொடங்கினுர். தன்னை தனது பிரதம சிஷ்யை மா. ஆனந்த் ஷீலா கொலை செய்யத்திட்டமிட்டிருந்ததாகவும் உணவிலும் தண்ணீரிலும் சைனட் போன்ற மிகக்கொடிய மருந்துகளை கலந்து வைத்திருந்தார்கள். ஆச்சிரமத்தை தீயிட்டுக் கொளுததப் பார்த்தார்கள், இந்தியா. சுவீட்சர்லாந்து, ஜெர்மனி, போன்ற நாடுகளிலுள்ள சுவாமிகள் பலர் என் மீது கொண்ட ஆத்திரம், பொருமை காரணமாக மா. ஆனந்த் ஷீலாவை பயன்படுத்தினுர்கள், ஆனந்த் ஷீலா ஆச்சிரமப் பணத்தில் பெரும் பகுதியை அபகரித்து விட்டார் என ரஜனீஸ் ஷீலா மீது குற்றம் சாட்டினுர். இவர் தனது பிரதம சிஷ்யை மீது குற்றம் சாட்டியது மிகவும் வேடிக்கையானது.

இந்தியாவில் இருந்து ரஜனீஷ் சுவாமியுடன் தப்பிச் சென்ற மா. ஆனந்த் ஷீலா என்ற பெண் இந்தியாவிலுள்ள பரோடாவில் 1949 ம் ஆண்டு பிறந்தார். இவர் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சிகரமான பெண். 1967ம் ஆண்டு ஒரு கல்லூரியிற் சேர்ந்து படிப்பதற்காக அமெரிக்கா சென்றுர். அங்கே மார்க் சில்வர் மேன் என்ற ஓர் அமெரிக்கரை மணம் செய்து கொண்டு அமெரிக்காவில் வசித்துவந்தார். சுவாமியிடம் பயிலுவதற்காக அவர்கள் இருவரும் 1973 ஆம் ஆண்டு இந்தியா வந்தனர். 1981ம்ஆண்டு சீடர் குழுவுடன் ரஜனீஷ் சுவாமியும் ஷீலாவும் இடம் பெயர்ந்து அமெரிக்கா சென்ற பொழுது ஷீலாவின் கணவர் சில்வாமேன் நோய் காரணமாக இறந்துவிட்டார்

சுவாமியின் பிரதம சிஷ்யையாக இருந்த மா. ஆனந்த் ஷீலா மீது இன்று சுவாமி குற்றம் சுமத்துவதைக் கண்டு கண்டு சீடர்களில் சிலர் திகைத்தனர்.

சுவாமி கூறிய வார்த்தைகளை கேட்டு ஆத்திரமடைந்த ஆனந்த் ஷீலா என்ற அவருடைய சிஷ்யை ஆச்சிரமத்தை விட்டு கடந்த செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் தனக்கு விசுவாசமான சில சீடர்களுடன் ஜெர்மனிக்கு சென்றுர். அங்கிருநது சுவாமி மீது பல குற்றங்களைச் சுமத்தினுர்.

மேற்கு ஜெர்மனியின் பிரபல்யமான ஸ்டேர்ன் என்ற சஞ்சிகைக்கு ஷீலா பேட்டி அளித்துள்ளார். அப்பேட்டியின்போது தான் தவறு எதுவும் செய்யவில்லை என மறுத்துரைத்துள்ளார். சுவாமி புதிய நகைகளை வாங்கிக் குவிப்பதிலும் 90க்கும் அதிகமான றோல்ஸ்ராய்ஸ் கார்களோடு மேலும் சிலவற்றை சேர்த்துக் கொள்வதிலும் அதிக அக்கறை கொண்டுள்ளார். ஆன்ம ஈடேற்றத்துக்கான போதனைகளில் சுவாமி அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை எனவும் அதனுலேயே தான் விலகியதாகவும் கூறியுள்ளார்.

அவரை நான் காதலித்தேன் அப்போது புரியவில்லை அவர் ஓர் ஈவு இரக்கமில்லாத மனிதர். ஆச்சிரமத்தில் ஆண்களும் பெணகளும் ஆடு மாடுகளைப் போல அலைந்து திரிகிருர்கள். தகாத முறைகளில் உறவுகளை வைத்துள்ளார்கள். போதைப் பொருட்களை உண்டுவிட்டு மயங்கிக் கிடக்கிருர்கள். ஆச்சிரமத்தில் கொலைகள் நடக்கின்றன. அங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்தால் கொன்று விடுகிருர்கள். ரஜனீஷ் புரத்திலுள்ள மூளைசாலிகள் எல்லோரும் என்னுடன் புறப்பட்டு வந்துவிட்டனர்.

நாங்கள் வெளியேறும்போது ரஜனீஷ் கூட்டுத்தாபனத்திலிருந்து ஒரு சதத்தைதானும் எடுத்து வரவில்லை, என்று தனது பேட்டியில் ஷீலா கூறியுள்ளார்.

(தொடரும்)

**அன்று அரசர்கள் வாக்குச் சீட்டினால் தெரிவு செய்யப்படவில்லை. அதனால் தமது வாக்கைக் காப்பாற்றுவதில் அவர்கள் அக்கறை காட்டுவர். அவர்கள் வாக்குக்கும் உயர்ந்த மதிப்பிருந்தது.**




**6**
(தொடர் கட்டுரை)

மகாபாரதக் கதையில் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட பெருயுத்தம், கர்ணனுக்கும் அருச்சுனனுக்கும் ஏற்பட்ட யுத்தமே. அதிலும் கர்ணன் சேனாதிபதியாக இருந்து பதினாறும், பதினேழாம் நாட்களில் அவர் அருச்சுனனோடு செய்த யுத்தங்கள் பாரதக் கதையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அருச்சுனனைக் கொல்வதற்கென்றே நாகாஸ்திரத்தை கர்ணன் வைத்திருந்தான். கர்ணனைக் கொல்வேன் என்று அருச்சுனன் சபதஞ் செய்திருந்தான். அதனால் அவர்களது யுத்தம் எல்லோராலும் பெரிதும் கவனிக்கப் பட்டது.

அருச்சுனனின் வில்லாற்றல் பிரசித்தமாக இருந்தாலும், கர்ணனின் கையில் இருக்கும் நாகாஸ்திரம் அருச்சுனனைக் கொல்லும் என்றே எல்லோரும் நம்பினர். அதனால்தான் கிருஷ்ணன் கூட கர்ணனிடம் குந்தியைத் தூதனுப்பி, நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் பிரயோகஞ்செய்யக் கூடாதென்று வரம் வாங்கச் செய்தான். அதனால் கௌரவர்களா பாண்டவர்களா வெல்வது என்ற உச்சக்கட்டப் போட்டி அன்றைய யுத்தமே ஆகும். அருச்சுனனா? கர்ணனா? யார் மிஞ்சுவார்கள். யார் மிஞ்சுவார்கள் என்பதே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் நிலையாக இருந்தது.

அருச்சுனனுக்கு கிருஷ்ணன் சாரதியாக இருப்பது, போர்க்களத்தில் வெற்றிகளைக் குவிக்கப் பெரிதும் அனுகூலமாக இருந்தது. அதேபோல தனக்கும் ஒரு நல்ல தேர்ச்சாரதி வேண்டும் என்று எண்ணமிட்டான் கர்ணன். சல்லியன் மிகவும் சாமர்த்தியமான தேர்ச்சாரதி. சல்லியனைத் தனக்குச் சாரதியாக அமர்த்தித் தந்தால், தான் அருச்சுனனைக் கொல்ல இலகுவாக இருக்கும் என்று துரியோதனனிடம் வேண்டிக் கொண்டான்.

நகுலன், சகாதேவன் ஆகியோரின் தாயான மாத்திரிக்கு சல்லியன் சகோதரன். சல்லியன் கர்ணனோடு நிகர் நிற்கக் கூடிய பெரு வீரனுமாவான். பாண்டவர்களுக்குப் போரில் துணைசெய்யவென்று, தனது மித்திர தேசத்திலிருந்து படைகளோடு வந்து கொண்டிருந்தான் சல்லியன். சல்லியனையும, படைகளையும் எப்படியாவது தனது பக்கம் சேர்த்துவிட வேண்டும் என்று எண்ணிய துரியோதனன் மாறுவேடத்தில் வழியிலே ஓர் அன்ன சத்திரம் அமைத்து, தண்ணீர்ப் பந்தலும் வைத்து சல்லியனுக்கும் அவனது படைவீரர்களுக்கும், உணவு பரிமாறி களைப்பைப் போக்கினான். விருந்தல் மகிழ்ந்த சல்லியன், மாறு வேடத்துல் இருந்த துரியோதனனிடம் 'உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன்' என்று சொல்ல, துரியோதனன் தனது உருவத்தை காட்டி பாரத யுத்தத்தில் தனக்கு துணையாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். வாக்குத் தத்தஞ்செய்தபடி சல்லியனும் அவனது படைகளும் துரியோதனனுக்கே துணையாகினர்.

முற்காலத்தில் வாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எவ்வளவு பெறுமதி இருந்திருக்கிறது. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் அரிச்சந்திரனைப் போன்ற பல சத்தியவான்கள் இருந்திருக்கிறார்கள். இன்றோ வாக்கும் மனமும் வேறுபட்டு விட்டது. அன்று வாக்குகளால் (சீட்டு) அரசர்கள் தேர்ந்தெடுக்கப் படாததால்தான் அவர்களது வாக்குக்கு அத்தனை மதிப்பு இருந்தது போலும். இன்று வாக்கு (சீட்டு) களினால் ஆள்வோர் தேர்ந்தெடுக்கப் படுவதால் அவர்களது வாக்கு தளம்பி விடுகிறது போலும்.

பதினேழாம் நாட்காலை கர்ணனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய துரியோதனன், சல்லியனை அணுகினான். சல்லியனோ 'தேரோட்டியின் மகனுக்கு நான் தேரோட்டுவதா! இதை வேறுயாராவது என்னிடம் கேட்டிருந்தால் அவர்களைக் கொன்றே போட்டிருப்பேன்'' என்று கோபமாகப் பேசினான்.

சாதி வேற்றுமைகள் ஏற்றத் தாழ்வுகள் அன்றைய சமுதாயத்தில் எப்படி இருந்தன என்பதை கர்ணனின் வரலாற்றில் அடிக்கடி காணலாம். ராஜாதிராஜனான துரியோதனன் சாதித் தாழ்வைப் பெரிது படுத்தாமல், தேரோட்டியின் மகனான கர்ணனுக்கு அரசும் கொடுத்து சம அந்தஸ்தும் கொடுத்து, தனது உயிர் நண்பனாக்கி ஒரே கலத்தில் சோறுண்டு, சமபந்தி போசனத்தையும் அன்றே செய்து காட்டி, சாதிக்குச் சாவுமணி அடித்திருக்கிறான் பாரதத்தில். ஆனால் நாகரீகம் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் இன்றைய உலகில் சாதி ஏற்றத் தாழ்வுகள் தலைவிரித்தாடுகின்றன. விஞ்ஞானமும், ஆடை அலங்காரமும் தான் வளர்ச்சியடைந்திருக்கின்றன. மனிதப்பண்பும், உளவளர்ச்சியும், ஏற்படவே இல்லைப்போல் தெரிகிறது.

**அகளங்கன்**

தனது காரியத்தை எந்த வகையிலும் சாதிக்கும், பழக்கமுடைய துரியோதனன், சல்லியனையும் சம்மதிக்க வைத்தான். சல்லியனும் கர்ணனும் தேரில் செல்வதைப் பார்த்து கௌரவ சேனை பெரிதும் மகிழ்ச்சியும், பெருமிதமும் உற்சாகமும் அடைந்தது. சல்லியனுக்கோ அருச்சுனனைக் கர்ணன் கொல்வதில் அவ்வளவு விருப்பமில்லை. தனது மருமகன் என்ற பாசம் ஒருபுறம். கர்ணனுக்குப் பெரும் புகழ் கிடைத்துவிடும் என்ற பொறுமை மறுபுறம். அதனால் கர்ணனிடம் ஏதாவது சொல்லி கர்ணனின் சிந்தனையைக் குழப்பி, காரியத்தைக் கெடுத்துக்கொண்டே வந்தான். சேனாதிபதியாக இருந்து சேனையை, கட்டுப்படுத்தி வழி நடத்தும் கர்ணன் சல்லியனின் கட்டுப்பாட்டிற்குள் சிக்க வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. ஒத்துப்போகாத இரு திறமைசாலிகளின் கூட்டினால் ஒருபயனுமே இல்லை என்பது உண்மைதானே. வீண்கதைகள் கதைத்து காரியத்தைக் குழப்புபவர்களை 'சல்லிப்பயல்' என்றும்,சல்லியனைப் போல் என்றும் இந்தியாவில் இப்பொழுதும் கூறுகிறார்கள்.

கர்ணனுக்கும் அருச்சுனனுக்கும் மிகவும் உக்கிரமாக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. கர்ணன் நாகாஸ்திரத்தை அருச்சுனன் மேல் பிரயோகிப்பதற்கு எடுத்தான். அந்த அம்புக்கு உரிய இலக்கு கழுத்து என்பதால் கழுத்திற்கே குறி வைத்தான். ஆனால் சல்லியனோ மார்புக்குக் குறிவைக்கும்படி வேண்டினான், அது யுத்த தர்மமல்ல, யுத்த முறையல்ல என மறுத்து "உனது கடமையை நீசெய். எனது கடமையைச் செய்ய எனக்குத் தெரியும்'' என்று கூறி அம்பை கழுத்திற்கே எய்தான், கிருஷ்ணன் தேரை நிலத்தில் அழுத்தி, குதிரைகளை முழங்காலில் படுக்கச் செய்து விட்டான். அதனால் நாகாஸ்திரம் அருச்சுனனின் தலை முடியைத் தட்டிக் கொண்டு சென்றது. அருச்சுனன் பிழைத்துக் கொண்டான்.

அச்சந்தர்ப்பத்தில் கர்ணனின் தேரும் மணலில் புதைந்து விட்டது. சல்லியன் கோபங்கொண்டு பாதியுத்தத்திலேயே புதைந்த தேரை அப்படியே விட்டுவிட்டு இறங்கிச் சென்று விட்டான். தப்பிப் பிழைத்த சந்தோஷத்தில் அருச்சுனன் உற்சாகமாகப் போர் புரிந்தான். கர்ணன் சாரதியுமின்றி தேரும் மண்ணில் புதைந்த ஆபத்தான நிலையில், "தேர்ச்சில்லை உயர்த்தி தேரைச் சரிசெய்யும் வரை சிறிது நேரம் யுத்தத்தை நிறுத்தும்படி மிகவும் விநயமாக வேண்டினான்.

(தொடரும்)




## கண்பார்வை இழந்த பின்பும் கலைத்தொண்டு

'பத்மபூஷண்' சம்பந்தமுதலியாருக்கு 75 வயதில் கண்பார்வை மங்கியது கண்பார்வையை இழந்தார்; ஆனால் கருத்துப் பார்வை ஒளிவீசியது. ஹோமர், மில்டன் போன்ற கலாமேதைகள் பார்வை இழந்தபோதும் ஆக்க இலக்கியத் துறையை கைவிடாதது போல, இவரது கலைத்தொண்டும் தொடர்ந்தது. வாய்மொழியாகச் சொல்லி அருமைப் பேத்தியைக் கொண்டு எழுதுவித்து ஆக்கம் பலவற்றை நூலுருப் பெறச்செய்தார். 'நான் குற்றவாளி', 'தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த வரலாறு', 'நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும்' போன்றன இக்கால கட்டத்தில் வெளிவந்த நூல்களாகும். முதுமையிலேயே முனைப்புக்கத்துடன் கலை வளர்த்தார் என்றால் இளமைத்துடிப்பு எத்துணை விசையுடன் கலையுலகை வளமாக்கியிருக்க வேண்டும்.

55 ஆவது வயதில் நீதிபதி வேலையில் இருந்து ஓய்வு பெற்றதும், இவரது தளரா நாட்டம் மேடையை பேணிட துரிதஓட்டம் கொண்டது. அந்தக் காலத்து ஆந்திர நாடகத் தந்தை பல்லாரி திரு வி.கிருஷ்ண மாச்சார்லு பம்மல் சம்பந்தரை பார்த்து, சிறந்த வழக்கறிஞராக மிளிரவேண்டுமெனில், நாடகத்துறைக்கு முழுக்கு போடும்படி கூறியபோது, 'நாடுதனைக் காக்கும் நடிகன் என விளங்கிடுவேன்' எனக் குரல் கொடுத்தார். 97 நாடகங்களை எழுதிக் குவித்தார். 'இந்தியனும் ஹிட்லரும்' போன்ற அரசியல் பிரசார நாடகங்களையும் வெளியிட்டார். சுவைஞர்கள் வேண்டுதலின் பேரில் 71 வயதில் 17 வயது சபாபதி பாத்திரம் தாங்கி மேடையில் தோற்றினார். நாடகங்களை மொழிபெயர்த்தும், புதியன யாத்தும், மேடை ஏறி நடித்தும், நடிப்பித்தும், உரையரங்குகள் மூலம் ஊக்குவித்தும் அன்று சீரழிந்த நாடகத்துறையை செப்பனிட்டார். 'நேரம் என்றால் நேரம்', உரிய காலத்தில் உரிய வேலை', 'ஒழுங்கு ஒழுக்கம்' என்பவற்றை சாதனையில் காட்டி நாடக உலகைப் புடம் செய்தார்' இவரது வாழ்வு எமக்கு கூறாமல் கூறும் பாடங்கள் பல.

## கிட்டப்பா வாழ்க்கை ஒரு எச்சரிக்கைப் பலகை

**ஏ.சி.பொன்னுத்துரை**

இசை நாடக உலகின் சக்கரவர்த்தி கிட்டப்பா. இயற்கையாகவே அமைந்த சங்கீத ஞானமும், பேச்சுத் திறமையும், கம்பீரமானதோற்றமும் இவருக்கு அழியாப் புகழை ஈந்தனர். கொழும்பில் நாடகம் நடாத்தி வந்த கே. பி. சுந்தராம்பாளுடன் ஈடுகொடுத்து நடிக்கப் பலருக்கு முடியவில்லை. கிட்டப்பாவின் இசைத்திறமையை, ஐந்து கட்டையில் அல்லது ஆறு கட்டையில் பாடவல்ல குரல் வளத்தை, அளவான நடிப்பாற்றலை விதந்தநிலையில் சுந்தராம்பாள் அவரையே தமது வழிகாட்டியெனக் கொண்டார். சங்கீதகாரரே பரிசளித்துப் பாராட்டினர். இசை நாடகத்துறையின் வணங்காமுடி இவர். கதர் உடுத்து, சுதந்திர இயக்கத்துக்கு நன்கொடை கொடுத்து தேசபக்தனாகத் திகழ்ந்தார். குரல் வளம் மனவளம் கொண்டு புகழ்பூத்து நின்ற கிட்டப்பா இறுதிவாழ்வை (பிற்காலத்தை) போட்டு உடைத்தமை கலைஞர்களுக்கு ஒரு எச்சரிக்கை பலகையாகிறது.

புல்லியர் சகவாசம பிராணனைக் குடித்தது. நண்பராய நடித்து தீய பழக்கங்களை இவரிடம் வளர்த்து அவர்கள் நயம் பெற்றனர். கிட்டப்பா மது அருந்திக் காலங்கழிப்பதைத் தொழிலாகக் கொண்டார். 1933ல், பாதி நாடகத்தில் மயக்கமுற்று வீழ்ந்தார். சகிக்கமுடியாத வயிற்றுவலியால் கதறினர் ஆறு கட்டையில் பாடிய கண்டம் பயனற்று அடங்கி ஓய்ந்தது. உடல் நலம் குன்றினால் நடிகனால் இயங்கமுடியுமா? அபார ஆற்றல்கள் இருப்பினும் கூட உடல்நலத்தை உடைக்கும் நடிகன் நடைப்பிணமாகிறான். நடிகர்க்கு வேண்டும் குரல்வளம் மனவளம் மேலாக உடல்வளம்.

## யாழ். கல்விக் கந்தோரில் இலக்கிய மணம்

யாழ். கல்விக் கந்தோரில் இயங்கும் கலாச்சாரப் பிரிவு மாதாமாதம் இலக்கிய கர்த்தாக்களைக் கொண்டு உரை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது. மதிய வேளையில் ஓய்வெடுக்கும் நேரத்தில் சிரிக்கச் சிந்திக்க கருத்துப் பரிவர்த்தனையில் ஈடுபட வாய்ப்பளிக்கும் இம்முயற்சி பாராட்டுக்குரிய முயற்சி. தலைவர் கே. சந்திரராசா, கலாச்சாரச் செயலர் செ. துரைசிங்கம், பொதுச் செயலர் இ. தவராசா என்போர் துடிப்புடன் இயங்குகின்றனர். சர்ச்சைகள் சுவாரஸ்யமாக நிகழ்கின்றன. இதுவரை சொக்கனின் 'இன்றைய வாழ்வில் சமயம்' ஏ. ரி. பொ. வின் கலைகளில் புதுமையிற் பழமை, கே. டானியலின் 'இன்றைய எழுத்தாளன், யே. பெனடிக்ற பாலனின் 'இலக்கியம் என்ன செய்யும்?' குறமகளின் 'இலங்கைத் தமிழ் சமுதாயத்தில் பெண் விடுதலை என்ற பேச்சுக்கள் இடம்பெற்றன. சிறிய

(11ஆம் பக்கம் பார்க்க)

இலக்கிய சர்ச்சை

டானியல் பதில்

# முன்னுக்குப் பின் முரணை

# ரகுநாதனின் சத்திய வேட்கை

**1--12—85 வாரமலரில் பிரசுரமான டானியலின் பேச்சுக்கு, திருவாளர்கள் என். கே. ரகுநாதன், அ. யேசுராசா ஆகியோர் எழுதிய பதில்கள் 1—12—85 வாரமலரில் வெளியாகின. இவற்றுக்கு டானியல் அவர்கள் எழுதியுள்ள பதில் இன்று பிரசுரமாகின்றது.**

கடந்தமாதம் நடந்த எனது 'அடிமைகள்' நாவல் வெளியீட்டு விழாவில் நான் தெரிவித்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் சாக்கில் திரு என். கே. ரகுநாதன் அவர்கள் ஈழமுரசில் எழுதிய சுயபுராணம், வசைபுராணம், தத்துவ விரிவுரைகள் ஆகியவற்றைப் பார்த்தேன்.

அதில் எனக்கு மிகவும் திருப்தியானது என்னவென்றால் ஏதாவது ஒரு புதிய சாமியார் உடைக்குள் புகுந்து கொள்ளாமலும், மொட்டைக் கடிதரூபத்தில் இல்லாமலும் சொந்தப்பெயரோடு வெளிச்சத்திற்குவந்து விட்டதுதான். இது எனக்கு மட்டும் பிடித்தமான ஒன்றாக இருக்க முடியாது. சமீபகாலமாக 'யார் இந்தச் சாமியார்? யார் இந்த யார்ப மனிதன்' என்று தேடுதல் போட்டுவந்த சகலருக்கும் இது பிடித்தமானதாகத்தான் இருக்கும்.

அக்கூட்டத்தில் என்னால் பேசப்பட்ட பேச்சுக்கு (படித்த மனிதர்கள் பாஷையில் 'சிந்திய முத்துக்களுக்கு') எதிராகக் கேட்கப்பட்ட ஒரே ஒரு கேள்வி 'யேசுராசாவைப் பொடியன் என்று சொல்லலாமா?' என்பதுதான். மற்றவையாவும் பிற விவகாரங்களாகும். 'நண்பர்களுக்கு விருந்து கொடுக்கிறேன்; பலரைப் பணம் கொடுத்து வாங்குகிறேன்' என்பவைகளும், 'இவரது சொந்தவாழ்க்கையைப் பற்றிச் சகலதும் தெரிந்து வைத்திருக்கிறேன் யாரும் கேட்டால் விஸ்தாரமாக விளங்கவைப்பேன்' என்று பூச்சாண்டி காட்டுவதும் வழமைபோல இதில் இடம்பெறத்தவறவில்லை. இக்கட்டுரையில் அவரால் குறிப்பிடப்படும் நான் செருக்குடன் கூறுகின்றேன்: என்னைப் பற்றி, இந்தப் பிரதேசத்தின் சகல கிராமங்களுக்குள் தெரியும், நான் எஜமானர்களாகக் கொள்ளும் சகலமக்களுக்குள் தெரியும, நிதானம் தவறாத சகலருக்கும் தெரியும். அதனால் அவைகள் பற்றிப் புதிதாக நான் எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை.

இந்த விவகாரங்கள் தொடர்பாகப் பதில் கூறி ஒரு பெரும் விரிசலை உண்டாக்கி விடக்கூடாது என்பதற்காக மிக நிதானமாக நான் பலமுறை கடைபிடித்த எனது மௌனத்தைத் தப்பர்த்தம் செய்து கொண்டு சொந்த விவகாரங்களுக்கு அப்பால் என்னால் மேற்கொள்ளப்படும் சமூக விவகாரங்களும், அரசியல் விவகாரங்களும் இழுத்தடிக்கப் பட்டதன் காரணத்தால் நான் இதை எழுத வேண்டியதாகிவிட்டது.

குரு தட்சணைபற்றி என்னால் மறுக்கப்பட முடியாதவைகள் பல உண்டு. இதைமுதலில் நான் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இவராலேயே குறிப்பிடப்படும் 'சிலுசிலுப்பு' நாவல் என்ற எனது பஞ்சமரை கையெழுத்துபிரதியாக எடுத்துச் சென்று 'பொலீஷ் செய்து நூலுருப்பெறச் செய்தது, எனது முதல் சிறு கதைத் தொகுப்பான டானியல் கதைகள் வெளிவருவதற்கு கொழும்பில் வைத்து சகலவித ஒத்தாசைகளும் புரிந்தது, எனது முதல்கதை வந்த போது அதைக் கொழும்பில் பிரசித்தம் செய்தது, அப்போதைக்கப்போது எனது சிருட்டிகளைப்படித்துச் சீர் செய்தது, காம விகாரப் படைப்புக்கள் என்ற பொருள்பட இன்று அவரால் குறிப்பிடப்படும் "உலகங்கள் வெல்லப்படுகின்றன என்ற பெயரில் 12ஆண்டுகளுக்குப்பின் விரகேசரிப்பிரசுரமாக வெளிவந்த நூலுக்கான கதைகளை என்னுடனேயே துணைநின்று வீரகேசரி பாலச்சந்திரன் முன்னிலையில் நிரைப்படுத்தி அவர் கையில் கொடுத்து உதவியது, ஆகியவைகள் உட்பட அவரால் கிடைக்கப்பெற்ற உதவிகள், ஒத்தாசைகள் எதையும் நான் இன்றுவரை மறுத்ததில்லை. பகிரங்கமாகவே பல பேட்டிகளிலும், இலக்கியப் பேச்சுகளிலும், கட்டுரைகளிலும் கூறியிருக்கிறேன். இவருக்கு மட்டுமல்ல எஸ். பொன்னுத்துரைக்கும் நன்றிகளைத் தெரிவித்திருக்கிறேன். இதைவிட ஒரு இலக்கியக்காரன் என்ற முறையில் இவர் என்னிமிருந்து எதை எதிர்பார்க்கிறார் என்பதை தனது எழுத்தில் சுட்டிக்காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இவராலேயே எழுதப்பட்ட போர்வை என்ற சிறுகதையில் காட்டப்பட்டுள்ள அடிக்கருவான துரோணாச்சாரியார் குருதட்சணையாக ஏகலைவனின் பெருவிரலைக்கேட்க ஏகலைவன் தனது பெருவிரலை வெட்டிக் கொடுத்து திருப்திகண்டு வில்வித்தையை விட்டுவிட்ட சம்பவத்தையாவது எனக்குப் போதனையாகக் கூறியிருக்கலாமே!

கட்டுரையாளர் என்மீது சுமத்தும் இலக்கியக் கோட்பாடு சம்பந்தமான பிரதான குற்றச்சாட்டை யாழ். சர்வகலாசாலையில் நடந்த நாவல் நூற்றாண்டு விழாவில் வெளியாகிய தனது கட்டுரையிலிருந்து மேற்கோளாகவே சொல்லியிருக்கிறார்; 'உயர்ஜாதி ஆடவர்கள் தாழ்ந்த சாதிப் பெண்களைப் போகப்பொருள்களாகப் பாவிக்கும் நடவடிக்கைகளுக்குப் பழிதீர்க்கும் எண்ணத்துடனேயே தாழ்ந்த சாதி ஆண்கள் மேல் சாதிப் பெண்களைப் போகப் பொருட்களாகப் பாவிக்கும் இலக்கியப் பழிவாங்கலைச் செய்கிறார்'' என்பதுதான் அவரால் குறிப்பிட்ட மேற்கோளின் உள் அடக்கமாகும். தனியாக இவர் மட்டுமல்ல, யேசுராசா உட்பட ஆங்கிலம் தமிழ், மரபு, இலக்கணம், உலக மொழிகளின் இலக்கியங்கள் சகலத்தையும் 'கரைத்துக் குடித்தவர்கள்' பலரிடமும் இக்கருத்து உண்டு இவர்கள் எல்லோருமே கூட்டுச் சேர்ந்து தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கிராமங்களை நடைமுறை நிகழ்வுகளை அவதானிப்பார்களாயின் இந்தப் போகப் பொருள் விவகாரம் மிகத் தெளிவாகத் தெரியும். உயர் நிலைப்பட்ட ஆண்கள் எப்படி கீழ்நிலைப்பட்ட பெண்களைப் போகப் பொருட்களாகக் கொள்கிறார்களோ. அதே ரீதியில் உயர் நிலைப்பட்ட பெண்களும், கீழ் நிலைப்பட்ட ஆண்களைப் போகப் பொருட்களாக அனுபவிப்பதை அறிவார்கள். இதனால் தான் வர்க்க நிலைப்பாட்டில் உயர வர்க்க ஆண்களுக்கும் பெண்களுக்கும், கீழ்வர்கக ஆண்களும் பெண்களும் போகப் பொருட்களாகவே இன்று வரை ஆக்கப்பட்டு வருகிறார்கள்'' என்பதை மிக அழுத்தமாக எனது சிருட்டிகளில் உள்ளடக்குகிறேன். எனது நாவலான பஞ்சமரில்வரும் கமலாம்பிகை அம்மாளும் மாம்பழத்தியும், முறையே செல்லப்பனையும், கற்கண்டனையும் போகப் பொருட்களாகக் கொண்டதும், அடுத்து கோவிந்தனில் வரும் அபுகம்மாநாச்சியார் கோவிந்தனைப் போகப் பொருளாகக் கொண்டதும் சொக்கட்டான் நாவலில் வரும் காமாட்சிஅம்மாள் காராளி முத்தையனைப் போகப் பொருளாகக் கொண்டதும் வெறும் கற்பனைகள் அல்ல. வர்க்க சிந்தனை அற்றவர்கள் – சுத்த இலக்கியக் காரர்கள் பற்களைக் கடித்துக்கொண்டு இந்த உண்மைகளை ஏற்றுக்கொள்வார்களாக!

சத்திய வேட்கை எது என்பதை எதற்கு உட்படுத்தலாம்?

உயர்ந்தபடியைச் சேர்ந்தவன் தன் உயர்வுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறிக்கப்பட்ட ஒரு ஒழுங்குக்குட்பட நிற்கவைப்பதைச் சத்திய வேட்கை என்கிறான்.

ஒரு சாதாரண தொழிலாளி வறுமைக்குள்ளும் செம்மை காண்பதையே சத்திய வேட்டையாகக் கருதுகிறான்.

ஒரு பத்திரிகையாளன் தான் காண்பவைகளைக் கேட்பவைகளை அப்படியே எழுதுவதையே சத்திய வேட்கை என்று கருதுகிறான்.

ஒரு ராணுவவீரன் தனது தளபதி கற்பிப்பதைச் செய்வதையே சத்திய வேட்கை என நினைக்கிறான்.

அறிவறிந்த காலத்திலிருந்து தனக்குச்சரியெனப் பட்ட ஒரு அரசியற்கருத்தைக் கடைசி வரை கடைப்பிடித்தலையே ஒரு சத்திய வேட்கை என இன்னொருவன் நம்புகிறான்.

ஒரு நலிந்தவள் தன்னும், தன்னைப்! போன்ற ஜீவன்களினதும் நலிவுகளுக்குக் காரணங்களைத் தேடிப்பிடித்து அவைகளை அழித்துவிடப் போராடுதலையே சத்திய வேட்கை எனக்கருதுகிறாள்.

ஓர் இயக்கப் போராளி தான் மனமுடைந்து பின்னடைந்தாலுங் கூட தன்னாலும் தனது சக போராளிகளாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளியே சொல்வதில்லை என்று சபதமெடுப்பதையே சத்திய வேட்கை என நினைக்கிறான்.

இப்படிச் சத்திய வேட்கையைப் பலத்துக்குள் அடக்கலாம். ஆனால் கட்டுரை ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்ட சத்திய வேட்கை எதற்கு உட்பட்டதென்று அவருடைய முன்னுக்குப் பின் முரணான வாசகங்களைக் கொண்டு இனங்காண முடியவில்லை.

"30, 35 வருடகாலங்களுக்குமுன்பு எழுதுவதற்குப் பேனா பிடித்த போது நெஞ்சில் ஒரு சத்திய நெருப்பு எரிந்தது. ஒரு புதிய உலகத்தைப்படைப்பதற்காகவே எழுதினேம், இப்போது இலக்கியம் வெறும் பம்மாத்தாகப் படுகிறது......'' என்று, ஓரிடத்திலும்,

"ஒரு எழுத்தாளன் என்ன தான் ஐம்பமடித்தும் என்ன? எத்தனை நூல்களை வெளியிட்டுமென்ன? ஒருவனுடைய வர்க்கத்தன்மை அவனுடைய செயல்கள் யாவிலும் வெளிப்படுவதைத் தவிர்க்க முடியாது' என்னும் மாக்சிசக் கோட்பாட்டை ஓரிடத்திலும்,

இன்னும் கம்யூனிஸ்கட்சி பிளவுபட்டதையும், வெகுஜன இயக்கம் சிதைவுற்றதையும் அவைகளோடு ஓடிய அரசியல் விவகாரங்களையும் குறிப்பிட்டுள்ள அவர் வெகுஜன இயக்கம் முடங்கி விட்டது என்பது பற்றி மனநிறைவு தெரிவிக்கும் விதத்திலும் அந்த விஷயங்களை அணுகியிருக்கிறார். இக் கட்டுரை வெளியாகும் இப்பத்திரிகை ஒரு அரசியற் பத்திரிகை அல்ல என்பதாலும், இந்த விவகாரங்களை உரிய உரிய இடங்களிலேயே பேசிக்கொள்ள வேண்டிய கடமைக்கு நான்

(11ஆம் பக்கம் பார்க்க)

# யேசுராசாவை நினைக்க பாவமாக இருக்கிறது!

சமீபத்தில் நடந்த 'அடிமைகள்' என்ற எனது நாவல் வெளியீட்டுவிழாவில் நான் கூறியதை மறுத்து யேசுராசா ஈழமுரசு மூலம் வெளியிட்ட கருத்தைப் படித்தேன். ''டானியல் கூறியிருப்பது போல எதுவும் நடக்கவில்லை'' என்று மறுப்பதோடு மட்டும் நின்றுவிட்டால் பிரச்சனை முடிந்தது. அப்படி மொட்டையாக மறுத்துவிடுவதனால் டானியல் ஏதாவது சாட்சியங்களைத் தேடிப்பிடித்து விடுவாரா என்ற பயத்தினாலோ என்னவோ கொழும்பில் அவருடன் இருந்த நண்பர்களையும், தான் எழுதத் தொடங்கிய காலத்தையும், புத்தகம் போட்ட காலத்தையும், கதைகளின் எண்ணிக்கையையும், எனது இலக்கியத்தின் மீது தான் கொண்டிருந்த கருத்தை நிரூபிக்க தனது அலை சஞ்சிகை தொடக்க காலத்தையும், தமிழகத்தில் தான் கூறிய கருத்துக்களையும், தமிழகத்துச் ''சதங்கை'' இதழையும் நிரைப்படுத்திச் சாட்சிகளாகக் கொண்டு வந்திருக்கிறார். யேசுராசா என்னோடு 'மினக்கெடுகிற' அளவுக்கு அவருடன் நான் 'மினக்கெட' விரும்பியதில்லை. விரும்பப் போவதுமில்லை.

''கிட்டத்தட்ட'' என்ற எனது சொற் பிரயோகத்தை வைத்துக்கொண்டு இதிலிருந்து விடுபட்டுக் கொள்ள அதிகதூரம் அவர் கஷ்டப்பட்டுள்ளார். 'கிட்டத்தட்ட' என்ற இந்தச் சொற்பிரயோகம் கிராமிய வழக்கில் எந்தக் குறிப்பான எல்லையையும் குறிப்பிடுவதல்ல என்பதை அவர் புரிந்து கொள்ளாமல் இருப்பது புதுமையல்ல. சரியாக நினைவுக்குட்படாத பகுதியை சராசரிக் கணக்குக்காக கோடிட்டுக் காட்டும் எல்லையைக் குறிப்பிட்டுக் கொள்வது தான் ''கிட்டத் தட்ட'' என்ற இந்தச் சொற்பிரயோகம். இந்த முறையில் தான் இந்தப் பதம் என்னால் பாவிக்கப்பட்டது.

1966ம் ஆண்டுக்கும் 74 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 11 கதைகளைத் தான் எழுதினேன் என்று அவர் ஒப்புக்கொள்கிறார். இவற்றில் அச்சேற்றப்பட்ட கதைகள் எத்தனை என்றோ, அச்சேற்றப்படாத கதைகள் எத்தனை என்றோ அவர் குறிப்பிடவில்லை. ஆனால் அவற்றுள் அச்சேற்றப்படாத கதைகள் சிலவும் இருந்தன என்பது எனக்கு ஞாபகம். அதை அவருக்கு மேலும் ஞாபகப்படுத்து முகமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுதல் அவசியமாகிறது.

'பஞ்சமர்' நாவல் முதல் பகுதி வெளிவந்த காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவ இலக்கிய மன்றத்தார் அதற்கான ஒரு விமர்சனக் கூட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்குப் போயிருந்த சமயம் ஒரு தொலைபேசி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்காக பேராதனைத் தபால் கந்தோருக்குப் போயிருந்தேன். அங்கே யேசுராசாவை நான் சந்தித்தேன். எனது வருகையை ஏற்கெனவே யார் மூலமாகவோ தெரிந்து வைத்துக் கொண்டவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பின்பு இலக்கிய உரையாடல்கள் முடிந்து யாழ்ப்பாணத் தொலைபேசித் தொடர்புக்காக சில மணிநேரம் நான் அங்கு காத்திருக்க வேண்டியதாயிற்று. அவர் வேலைக்கவனத்தில் இருந்ததால் அந்த இடைநேரத்தில் எனக்குத் துணைக்காக நான்கைந்து கையெழுத்துப் பிரதிகளைத் தந்து இவைகள் ''இன்னும் வெளிவராதவை பாருங்கள்'' என்று கூறிவிட்டு வேலையில் இருந்துவிட்டார். கையெழுத்துப் பிரதியை விரைவில் படிப்பதென்பது வழமையில் எனக்குக் கஷ்டமானதொன்றாகும். இருந்தும் அந்த இடைநேரத்துள் இரண்டு கதைகளை மட்டும் படித்ததாக ஞாபகம். முடிந்தால் வேறோர் நேரத்தில் பார்க்கலாம் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதற்குப் பின்பு அவரை எனது வீட்டில் தான் பார்த்தேன். அவர் எழுதியதாக - அல்லது அச்சில் வந்ததாக ஒப்புக் கொண்ட கதைகளோடு இந்தப் பிரதிகளும் இருந்தன. இரண்டாவது தடவை படித்த ஞாபகம் இன்றும் நினைவில் இருக்கிறது.

1975ம் ஆண்டு வெளிவந்த முதலாவது இதழிலேயே என்னைப்பற்றி எழுதியதாகவும், வேறு இதழ்களிலும் எழுதியதாகவும் குறிப்பிடுகிறார். இதுவரை வெளிவந்த இவரது அலைகளில் எதனிலேனும் அல்லது மறு சஞ்சிகைகளிலேனும் எனது ஏதாவது ஒரு படைப்புப்பற்றிய ஒழுங்கு முறையான ஆய்வொன்றினை

11ஆம் பக்கம் பார்க்க

★ ஒரு கண்ணோட்டம்

# கலாநிதி மௌனகுருவின் விடிவு

மனித வாழ்வின் தேடலை மையப்படுத்தி, மனிதப்பிரச்சனைகளை பொதுமைப்படுத்தி அவற்றுக்கான வழிவகைகளை விளக்க முற்படுகிறது 'விடிவு'. நாட்டிய நாடகம் என்னும் வடிவை இந் நாடகம் பெற்றுள்ளபோதும் நாட்டுக்கூத்து, ரஷ்யன்பலே, பரதநாட்டியம், கதகளி போன்ற பல வடிவங்களின் மொத்தமான கலப்பில் உருவானது 'விடிவு'. பல வகைகளிலும் குறியீடு, உருவக உத்திமூலம் மனித வாழ்வின் சோகம், அவலம் போன்றவற்றுக்கு 'விடிவு' காண விழைகிறார் கதை, வசனம், நெறியாள்கை என்பவற்றைக் கையாளும் ஆசிரியர். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் நடிப்பில் நல்லூர் மூலவள வெளிக்கள நிலையப் படைப்பாக இந்நாட்டியநாடகம் மேடையேற்றப்பட்டது. 35 நிமிட நேரம் வேதகாலம் தொட்டு கொம்பியூட்டர் யுகம் வரையான நிகழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கலாநிதி. சி. மௌனகுரு அவர்களின் 'சங்காரம்' எனும் நாட்டுக்கூத்து பாணியிலமைந்த நாடகம் மனிதனுடைய வாழ்வியலை பொதுமைப்படுத்திக் காண விழைந்தது. அதேபோல் இன்னொரு வகையில் 'விடிவு' மனிதனுடைய பிரச்சினைகள், சோகங்கள், அவலங்கள் என்பனவற்றை முன்வைத்து அதற்கானகாரண காரியங்களை ஆராய்ந்து, தீர்வை முன்வைத்து விடியலை ஏற்படுத்துகிறது.

நாட்டிய நாடகம் ஆரம்பத்தில் கதை சொல்வோரின் நாட்டுக்கூத்துப் பாணியில் அமைந்த வெளிப்பாடாக சபை வணக்கம் கூறுகிறது. 'பழைய கதைகள் சொல்லவில்லை புதிய கதைகள் கூற வந்தோம்' என ஆரம்பத்திலேயே முத்திரை குத்தப்படும் போது சபையிலுள்ளோர் நிமிர்ந்து உட்காருகிறார்கள். நான்கு கதை சொல்வோரும் குறவன் குறத்தி பாணியில் உடையலங்காரம் செய்யப்பட்டிருந்தார்- இவர்களுடன் சேர்ந்து மேடையின் முற்புற ஓரத்தில் இசையமைப்பாளர்களும் பாடகர்களும் அமர்ந்து பின்னணி வழங்கிக் கொண்டிருந்தார்கள். நாட்டுப்பாடல் மெட்டு, பரதநாட்டிய நட்டுவாங்கம், கர்நாடகஇசை, நவீனஇசை என்பன தேவைப்படும் போது நாடகத்தில் சேர்ப்பது ஒரு சிறப்பான உத்தியாக கொள்ளப்படவேண்டியதே. இசை, நாடகவடிவம், நாட்டியபணி எல்லாம் பல விதங்களின் கூட்டு என்றபோதும் கரு குறிப்பிட்ட ஒரு நிலையில் காணப்பட்டதால் கதை இலகு நடையில் நடந்தும் ஓடியும் பாய்ந்தும் சென்றது.

குறியீட்டு வடிவில் மனித வாழ்வின் அவலங்களை பின்ன முற்படும் ஆசிரியர் மழையில்லாது வரண்டிருக்கும் பாலைவனத்திலிருந்து வருகின்ற மனிதர்களை மேடையில் கதை சொல்பவன் மூலம் அறிமுகப்படுத்துகிறார்.

'யார் இவர்கள் என்ன குறை' என்று கதை சொல்பவள் எடுத்த எடுப்பிலே சோக ரசனையை கொட்டிய உடன் நாடகம் விறுவிறுப்புடன் செல்லுகின்ற மனோநிலையை பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியது; ரஷ்ய, 'பலே' நடன பாணியில் பாலைவனத்திலிருந்து வரும் மனிதர்கள் மேடைக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றார்கள். இம்முறை அவர்களின் சோகத்தை வெளிப்படுத்தும் கருவியும் ஆகிறது. கிழவர் கிழவி முதல் இளைஞர் யுவதி என ஒரு சமூகமே நம்முன் நிற்கும் பிரேமையை உண்டாக்கி விடுகிறது

**சங்கர செல்வி**

'மழைஇல்லை பயிர் விளையவில்லை' எனும் விடை அச்சமூகத்தின் யுவதி ஒருத்தி மூலமாக கூறப்படுகிறது. கதை சொல்பவன் பார்வையாளர்களுக்கு கதையையும் நாடகத்தையும் அறிமுகப்படுத்தும் அதே நேரம் பார்வையாளர் கேட்கும் பாணியில் அநுதாபத்துடன் 'என்ன குறை' என்று கேட்டு 'என்ன மார்க்கம்' எனவும் கேட்டு உதவி செய்யத் தலைப்படுகிறான். கதை சொல்பவனின் இன்னொரு பணி நடிகர்களுடன் தானும் சேர்ந்து நடிப்பது. இவ்வகையாக 3 நிலையில் தன் பணியைச் செய்கின்றான்.

மக்களின் சோகத்துக்கு, நீரின்மையால் வருந்தும் சோகத்துக்கு மார்க்கம் அடுத்து நிகழ்த்தப்படுகிறது. நடைமுறை வாழ்க்கையில் மனிதன் எவ்வாறு யதார்த்தமாக சிந்திப்பானோ அதே பாணியில் 'மழையை' வேண்டிப் பிரார்த்திக்கிறது அம் மனித கூட்டம். 'கோரஸ்' பாணியில் கோஷம் எழுப்பப் படுகிறது. 'மழையே நீ வா' 'மழையே நீவா' 'மழையே நீ வா' என பிரார்த்தித்து சோர்வடையும் மக்களுக்கு 'சோர்வை அகற்று' என்றும், அந்நிலையிலும் மழை வராதது கண்டு 'யாகம் செய்வோம்' என்று அடுத்த மார்க்கம் கூறியும் வழிப்படுத்துகிறான் கதை சொல்வோன். உண்மையில் 'யாகம் செய்வோம்' என்ற கோஷம் தியாகம் செய்வோம்' என மண்டபத்தல் எதிரொலித்தது. அதுவும் நாடகக் கருவுக்கு உரமளிப்பதாகவே தோன்றியது. அடுத்து யாகம் செய்யும் காட்சி இக் காட்சி நிலை பிரச்சினைக்கான பரிகாரம் என்ன என சிந்திப்பது போன்ற உண்மைநிலையை குறியிடுகிறது எனலாம். பின்னணியில் 'மழையே மழையே வருவாய் வருவாய்' எனும் பாடல் இசைக்கப்படுகிறது. உண்மையாக யாகம் நடைபெறும் ஒரு பிரக்ஞையை அக் காட்சி உருவாக்கிற்று என்றால் மிகையாகாது.

தொடர்ந்து சிவனும் பார்வதியுமக இருவர் நிலை மாறி காட்சி கொடுக்க ஒரு பகுதியினர் யாகம் செய்ய, மற்றும் நால்வர் பரதம் மூலம் மழை வேண்டும் பிரார்த்தனை காட்சியை அளித்தனர். இந்நிலையில் பின்னணியில் மாணிக்கவாசகரின் ''முன்னிக்கடலை சுருக்கி எழுந்துடையார்'' எனும் திருவெம்பாவைப் பாடல் இசைக்கப்படுகிறது. நெறியாளர் பரதம் ஆடும் நிலையில் முற்புற பிற்புற காட்சிகளை மிகவும் நுட்பமாக பார்வையாளர்களுக்கு வழங்குவது அவரது கலையின் பார்வையை வெளிப்படுத்துகிறது. இந்நாடகம் 'வட்டக்களரி' அமைப்பில் மேடையேற்றுவதற்கும் மிகப் பொருத்தமானது என இப்பரதநாட்டியக் காட்சி சான்று பகர்கிறது. மீண்டும் மேடையில் 'மழையே மழையே வருவாய் வருவாய், எனும்யாகக்காட்சி தொடர்கிறது. அந்நிலையிலும் அம்மனிதக் கூட்டத்தின் பிரச்சினைக்கு தீர்வு-மழை பொழியவில்லை, ஆனால் அச்சமூகம் சோர்வடையவில்லை தளர்ச்சியடையவில்லை. காட்சியின் தன்மை மாறி வேகப் படுகிறது. 'முயற்சி செய்வோம்' எனும் சிந்தனை வலுப்படுகிறது. 'முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்', 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' எனும் உண்மையை முன்வைக்கிறார் கதைஆசிரியர். மேடையில் பலவித நிகழ்வுகள் இக் கட்டத்தில் நிகழ்த்தப்படுகிறது. தொழிலாளர்கள் தொழில் புரிகின்ற காட்சி பலவிதத்திலும் வெளிப்படுத்தப்படுகிறது. கொம்பியூட்டர் இயக்கும் காட்சி முதல் விறகு வெட்டும் காட்சி வரையும் மனித முயற்சி விளங்கப்படுத்தப்படுகிறது.

11ஆம் பக்கம் பார்க்க

---

'அருணந்தியார்...எனக்கு உடனடியாக ஒரு வீடு வாடகைக்கோ சொந்தமாகவோ தேவை. என்ர மாப்பிளையும், மகளும் கொழும்பால வந்திருக்கினம்...வீடுவளவு பாக்கினம் வாங்க... அவையளுக்கு திரும்பவும் கொழும்புக்குப் போற எண்ணமில்லை. நல்லவேளை. அவர் தன்ர கையிருப்பெல்லாத்தையும் பாங்கில போட்டதால அதிக சேதமில்லை.'

'இப்ப ..இங்கினேக்க காணி வாங்கவோ?...'

'ஓம்...ரவுணுக்குகிட்டவா... பஸ் ஸ்ராண்ட், ரயில்வே ஸ்டேசன்... ஆஸ்பத்திரி...கல்லூரிகளுக்கு கிட்ட அமைவா ஏதும் இடம் இருக்கே எங்கினேக்கும்...'

'காணிவாங்க நல்லநேரம் பாத்தியள். இப்ப சும்மா கிடந்த காணியெலலாம் ஆனைவிலையால்ல ஏறிப்போய்க்கிடக்கு ..'

'அதுக்கென்ன? காணிவிலை ஏறினு ஏதும் நட்டமே. விக்கேக்க வாங்கின விலக்குக் கூடத்தான விக்கப்போறம்.,அதோட அயல் காணிகளின்ரவிலையும் கூட, ஒரு மனுசாதியான ஆக்கள்தான அங்கயும் காணி வாங்கியிருக்க வருவினம்...'

'நீங்க பரப்பு என்ன விலையாய் பாக்குறியள்...'

'காணியைப் பாத்துத்தான சொல்ல முடியும்? நாங்கள் சொல்லிற வசதியோட காணிகிடைச்சா இரண்டு, மூண்டுவரை கொடுக்கத் தயார்.'

'என்ன லக்ஷமோ?—எவ்வளவு காசை கொழும்பில் இருந்து சம்பாதிச்சிருக்கிறுங்கள்.'

'ஏதும் காணியிருக்கே?...'

'ஆர்...என்னட்டையோ? என்ரகாணியெல்லாம் பிள்ளையளின்ர பேரிலதான் கிடக்கு...எங்கயும் விசாரித்துச் சொல்லுறன்...'

திரும்பிவரும் வழியெல்லாம் ஒரே சிந்தனை அவருக்கு.

'மகளும் நைஜீரியாவாலயோ...லண்டனலயோ இப்ப வருவதாகத் தெரியேல்ல...சிலசமயம் அவை அங்கினேக்கயே குடியுரிமையும் பெற்று விடலாம். என்ர செத்தவீட்டுக்குக்கூட வந்து போவினமோ தெரியாது. அப்ப அவவின்ர காணியை நான் பொத்திக்காத்து என்னபயன்....ஏழுபரப்பும் வித்தாலும் மூண்டுலச்சப்படி...எப்படியும் இருபதுலச்சமாவது தேறும்...அதை வட்டியிலபோட்டா...அஞ்சுசதவட்டியில விட்டா லக்ஷத்துககு...ஐயாயிரம்......இருபதுக்கும்......அடேயப்பா......வட்டியே லக்ஷத்துக்குமேல வரும்...மாதமொண்டுக்கு .. அப்ப பிள்ளை வரேக்க...... என்னமாதிரிப் பெருகியிருக்கும்...அவளிட்டும் ஒரு வார்த்தை கேட்டிட்டு ..?

—பேராசையில் அவர் நெஞ்சம் படபடக்க வேகமாக நடந்தார்.



★

# விடியலைத் தேடும் வெண்புறா

**செம்பியன் செல்வன்**

★

## 2

அறு என்றேன் அரசு என்றான்
ஆவன்று என்றேன் ஆட்சி என்றான்
இறு வென்றேன் இனி இங்கே என்றான்
ஈயன்று வென்றேன் ஈழம் என
முடித்தான் பாடத்தை நான் முடிக்க

—கவிஞர் சத்யா

நிகழ்ச்சிகள் வேகமாக நடந்தேறின. எதிர்பார்த்தவை யாவும் எதிர்பாராமல் துரிதமாகி . நாடெங்கும் குழப்பம்...கலவரம்......இனக் கொலை ..கொள்ளையடிப்பு...தீவைப்பு...அகதிகள் முகாம் திறப்பு...வடக்கிற்கு கொழும்பிலிருந்து கப்பற்சேவையில் உடுத்த துணியுடனும்... கையில் பிடித்த உயிருடனும் ..மக்கள் வந்து குமியலாயினர். ஊரடங்குச் சட்டம் அவர்களை அந்தந்த இடங்களில் உட்காரவைத்தன... ஊரடங்க, நாட்டின் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன...கொளுத்தப் பட்டன...

நேற்று மானமாக வாழ்ந்தவர்கள்......விடியும்போது மானத்தை இழந்து நடுச்சந்தியில் நாலுமுழத்துண்டுடன் இருந்தனர். வசதிக்காரனும் வசதியற்றவனுகி... சமத்துவ பூமியில் நடமாடினுன். புதிய ஏழைகளால் புதிய வாழ்க்கை முறையில் வாழமுடியாத தவிப்பு... திணறல்...

திருநெல்வேலியில் பலியாகிய இராணுவ வீரர்களின் சடலங்கள் கொழும்புக்கு விமானமூலம் எடுத்துச் செல்லப்பட்டன. புதிய கொள்ளைக்கு உணர்ச்சிகரமான விழா எடுப்பு. கனத்தை மைதானத்தில் பேய்வெறியாட்டம். காடையர் தேசபக்தர்களானுர்கள். இராணுவத்தின் மீது மக்கள் கொண்ட அபரிமிதமான பற்று. சகோதரபாசம்

மழை...

5ம் பக்கத் தொடர்

பெரியதொரு மக்கட் கூட்டம் அவள் நுழையவிருந்த பகுதியின் எல்லையிலே நின்று அவளுக்குக் கடைசியாகப் பிரியாவிடை அளித்தது. அவர்கள் அநுதாபத்தோடு அவளை நோக்கிக் கூறிய வார்த்தைகள் அவளுக்கு இன்னதென்று விளங்கவில்லை அவள் திரும்பி அவர்களிடையே போனாள். கூட்டத்தில் நின்ற சிறுமியொருத்தி, வியர்வை நிறைந்த தன் கையில் வைத்திருந்த காதணி ஒன்றை ஒஜெண்டாவிடம் கொடுத்தாள். 'இறந்தோரின் உலகை நீ சென்றடைந்ததும் இந்தக் காதணியை என் தங்கையிடம் கொடுத்துவிடு. அவள் சென்ற வாரந்தான் இறந்து போனாள். அவள் இந்தக் காதணியை மறந்து போனாள்.' அந்த அபூர்வ வேண்டுகோளினால் ஒஜெண்டாவின் சஞ்சலம் கூடியது. எனினும் அவள் காதணியை வாங்கிக் கொண்டாள். அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இறந்தோருக்கு அவர்களை நினைத்திருக்கும் உறவினர் தமது அன்பை அவ்வப்பொழுது பலிகள், விருந்துகளால் தெரிவிப்பதுண்டு. ஆனால் பரிசில் கொடுத்து அனுப்புவது இதுதான் முதல் தடவை.

ஒஜெண்டா மௌனமாக எல்லையைக் கடந்து அமானுஷிய பிரதேசத்துள் பிரவேசித்தாள். அவ்வேளையில் அவள் மிகவும் வேதனையோடும் பரிதாபத்தோடும் காணப்பட்டாள். ஆனால் மக்களிடையே அவளின் சோகத்திற்கான புதிரியக்கம் எதுவும் இல்லை. அவர்களுக்கு மழை எப்போது பொழியும் என்பதில்தான் குறி. அவர்களின் பசிப்பிணிக்கு ஒரே மருந்து மழைதான். எவ்வளவு விரைவில் ஒஜெண்டா ஏரியை அடைகிறாளோ அவ்வளவு விரைவில் மழைகிடைக்கும். அவர்கள் ஆரவாரத்தோடு அவளை அனுப்பிவிட்டுத் தங்கள் வழியிலே திரும்பிச் சென்றார்கள்.

ஆவிகளும் முன்னோரும் வாழும் பிரதேசத்தினுள் ஒஜெண்டா நடந்து கொண்டிருந்த பொழுது விநோதமான ஒலிகள் எழுந்தன. அவை அவளின் பயத்தை மிகுவித்தன. திரும்பி ஓடி விடுவோமா, என்று அவள் சிந்தித்தாள் ஆனால் அது முடியாதகாரியம். மக்களின் விருப்பம் நிறைவேற்றப்படுதல் அவசியம் ஒஜெண்டா களைத்துப் போனாள். ஆனால் பாதையோ நீண்டு நீண்டு சென்றது திடீரென்று மரங்கள் நிறைந்த பகுதி முடிந்து மணற் பரப்புத் தோன்றியது கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே மணல் மணல் மணல் அங்கிருந்து தண்ணீரைக் காண வெகுதூரம் சென்றாக வேண்டும்.

ஒஜெண்டாவிற்கு அச்சம் உண்டாயிற்று. தன்னை பலி கொள்ளவிருக்கும் தெய்வத்தின் தோற்றம், உயரம், அளவு என்பன பற்றி அவள் யோசித்துப் பார்த்தாள். மக்கள் இவைபற்றி அவளுக்கு ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. ஏரித்தெய்வம் பற்றிப் பேச்செடுத்தாலே போதும் அழுத குழந்தை கூட அச்சத்தால் வாய் மூடி மௌனமானதைத் தான் அவள் கண்டாள் சூரியன் உச்சிக்கு வந்திருந்த வேளை. எனினும் வெப்பம் அவ்வளவாகத் தெரியவில்லை. அவள் நீர்த்துருத்தியை எடுத்துச் சோர்வோடு தண்ணீரை அருந்தியபடி மேலே நடந்தாள் அப்பொழுது யாரோ தன்னைத் தொடர்ந்து வருவதாக உணர்வு ஏற்பட்டது அது தான் ஏரித்தெய்வமா? மயிர் கூச்செறிந்தது, உடல் நடுங்கியது, இதயம் படபடத்தது; எலும்புக்குருத்துகளுள்ளே இரத்தம் உறைந்து போவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

ஒஜெண்டா பின்னாலும் பக்கங்களிலும் திரும்பி நோக்கினாள், எதுவுமே கண்ணுக்குப் புலனாகவில்லை. காற்றில் எழுந்த புழுதிப்படலந்தான் தெரிந்தது.

அவள் விரைவாக நடக்க முயன்றாள். ஆனால் பயம் அவளின் கால்களை பின்னிக் கொண்டது வியர்வையில் உடல் மூழ்கிப் போயிற்று.

சூரியன் விரைவாக மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான்; ஏரிக்கரையும் அவளோடு சேர்ந்து தூரத் தூர விலகிச் செல்வது போலத் தோன்றியது

ஒஜெண்டா ஓடத்தொடங்கினாள். சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு அவள் ஏரிக்கரையை அடைந்தாக வேண்டும் அவள் ஓட ஓட அவளைத் தொடர்ந்து வரும் காலடி ஓசையும் கேட்ட வண்ணமே இருந்தது அவள் திரும்பி ஓசை கேட்கும் திசையில் கண்களைக் கூர்மையாகச் செலுத்தினாள் புதர் ஒன்று கால் பெற்று விரைவது போல இருந்தது இன்னும் சில எட்டுக்களில் அது அவளை அடைந்து விடும்.

ஒஜெண்டா தனது முழுப் பலத்தையும் திரட்டிக் கொண்டு மிக விரைவாக ஓடலானாள். சூரியன் மறைவதற்கு முன் ஏரியினுள்ளே குதித்துவிட அவள் தீர்மானித்து விட்டாள். இப்பொழுது அவள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஆனால் அவளைத் துரத்து வந்த பிராணியோ அவளை மிக நெருங்கி வந்து விட்டது; சத்தம் போட முயன்றாள் நாக்கு அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது. அவளின் குரலே அவளுக்குக் கேட்கவில்லை. பிராணி அவளைப் பிடித்து விட்டது அதன் கரங்களிலதான் எவ்வளவு வலிமை.

ஒஜெண்டா! தரையில் விழுந்து மூர்ச்சையாகிப் போனாள்.

ஏரியின் குளிர்காற்று அவளின் உடலை ஸ்பரிசித்தபொழுது மூர்ச்சை தெளிந்தது அப்பொழுது மனிதன் ஒருவன் அவளின் முகத்தின் முன்பு குனிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தான் "ஓ...—... ஒஜெண்டா பேசுவதற்கு முயன்றாள் அப்பொழுது அந்த மனிதன் அவளின் வாயினுள்ளே தண்ணீரைவிட அதை மிகச் சிரமத்துடன் விழுங்கினாள்.

"ஒசிண்டா; ஒசிண்டா! தயவு செய்து என்னை இறக்க விடு. சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறான். நான் இறக்க வேண்டும். இறந்தேயாக வேண்டும்"

ஒசிண்டா அவளது இடைச் சங்கிலியை வருடியபடி கண்ணீர் விட்டான். அந்தக்கண்ணீர்த்துளிகள் அவளின் முகத்தில் விழுந்து தெறித்தன. 'நாங்கள் விரைவாக வேறொரு நாட்டுக்கு, எங்களை யாருமே தெரிந்து கொள்ளாத நாட்டுக்கு ஓடிவிடவேண்டும். மூதாதையரின் கோபத்திலிருந்தும் ஏரித்தெய்வத்தின் குரோதத்திலிருந்தும் தப்புவதற்கு உடனடியாக இவ்விடத்தை விட்டு ஓடிச்செல்வோம், வா' ஒசிண்டா வரைவாகச் சொன்னான்.

'ஆனால் நான் சபிக்கப்பட்டவளாகி விட்டேன். ஒசிண்டா இனி உனக்கு என்னால் ஆகப் போவது ஒன்றும் இல்லை. மேலும் எங்கள் மூதாதையரின் விழிகள் எங்களைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். நாங்கள் எங்குச் சென்றாலும் அமைதி கிட்டாது. எங்களால் ஏரித்தெய்வத்திடமிருந்து தப்புவதும் முடியாத காரியம்.

ஒஜெண்டா அவனது கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து ஏரியை நோக்கி நடக்கலானாள். ஆனால் ஒசிண்டா அவளை விடவில்லை. அவளின்கைகளை இறுகப்பற்றியபடி, "நான் சொல்வதைக் கேள், ஒஜெண்டா. இதோ இரண்டு வெள்ளாட்டுத் தோற் போர்வைகள் உள்ளன. இவற்றில் ஒன்றை நீ அணிந்துகொள்" என்று சொல்லிய வண்ணம் அவன், அவளின் பதிலுக்குக் காத்திராமல், அந்த போர்வையால் அவளின் உடலை மூடினான்; தானும் மற்றபோர்வையால் தன் உடலை மூடிக் கொண்டான். "இவை மூதாதையரதும் ஏரித் தெய்வத்தினதும் பார்வையிலிருந்து எம்மைக் காப்பாற்றும். இப்பொழுது நாம் ஓடிச் செல்வோம்'. அவன் ஒஜெண்டாவின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் வந்த பாதையிலிருந்து விலகி வேறு பாதையால் ஓடத்தொடங்கினான்.

வழியில பறவைகளின் முட்கள் கால்களை உறுத்தின. புனிதப் பிரதேசத்திலிருந்து விலகி அரைவாசித் தூரம் சென்றதும் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அவ்வேளையில் சூரியன் ஏரியினுள் இறங்கிக் கொண்டிருந்தான். அவர்களுக்கு அச்சம் உண்டாயிற்று. அவர்கள் மேலும் விரைவாக ஓடலாயினர்.

"என்னில் நம்பிக்கை வை ஒஜெண்டா. அது எங்களின் வழியில் எம்மைத் தொடர்ந்து வராது"

எல்லையைக் கடந்து அப்பால் நின்று அவர்கள் பார்த்த பொழுது இன்னமும் சூரியன் முற்றாய் மறைந்து போகவில்லை.

"அது போய்விட்டது. அது போய்விட்டது" ஒஜெண்டா

11ஆம் பக்கம் பார்க்க

தீயாகப்பரவியது. வீடு, வாசல், கடைகண்ணிகள் மட்டுடன் நிற்கவில்லை. சிறைப்பட்டிருந்த பயங்கரக்குற்றவாளிகளுக்கும் இராணுவத்தின் அழிவு சகிக்க முடியாது போயிற்று. சிறையினுள்ளேயே கலகம் செய்யத் தொடங்கினர். சிறைகளை உடைத்தனர். விடுதலையாவதற்கல்ல. தங்களைப் போன்ற சிறைப்பறவைகளின் இறகுகளை ஒடிக்க..... விழிகளைத் தோண்ட...

பூகம்பம் தொடர்ச்சியாக ஏற்பட்ட சீரழிவு. மனிதாபிமானம் ரத்தச்சேற்றில் திகுமுக்காடியது...மனிதவுரிமைகள் மண்ணில் புரண்டன.

யாழ்ப்பாணம் அலைமோதிக் கொண்டிருந்தது. முன்பு மொட்டை உடைகளுடன் நடமாடியவர்களை கொழும்புக்காரர் என்று இனம் கண்டது போல கலைந்ததலை, அழுக்குலோங்ஸ், சாரம் என்பவற்றுடனும் வார் கிழிந்த செருப்புடனும் நடமாடியவர்களை கொழும்புக்காரர் என இப்பொழுது இனம் காணமுடிந்தது.

'எதில வந்தனியள்?...கப்பலேலா, பிளேனே?' ...

'பிளேனில இடம் கிடைக்கேல்ல...அதுக்குப் பாத்துக்கொண்டிருந்தா உயிருக்கு என்ன உத்தரவாதம்... கப்பல்லதான் வந்தனாங்கள்...'

'முந்தி எங்களுக்கொண்டும் பயமில்லை .. பணமிருந்தது... மந்திரிகளும் எங்களைக் காப்பாத்திச்சினம்...இந்தமுறை அவையளாலயும் ஒண்டும் செய்ய முடியேல்ல...'

'எங்கட சிங்களத் தோழர்கள் எங்களைக் காப்பாத்துவினம் எண்டு பயமில்லாமலிருந்தம்... ஆனா... எங்களைத்தாக்க முன்வந்த கூட்டத்தில முன்னிண்டது எங்கட தோழர்களாத்தானிருந்தினம்'

உதுகளையெல்லாம் பாத்தா... எல்லாமே இனக்கட்சிகளாகத்தானிருக்கு... உவையளை நம்பி... இருந்தது பெரியமடைத்தனம் தான்...'

'என்ர சொத்து சுதந்திரம் எல்லாம் போச்சு... பொடியள் செய்யிறதுதான் சரி...

'என்ர புள்ளைகுட்டியளைப் பதைக்கப்பதைக்கக் கொண்டாங்களே... அவங்களில நாலைஞ்சுபேரைக் கொண்டு பலி எடுத்தாத்தான் நெஞ்சு வேகும்...'

'உடுத்த சாறத்தோட... மாத்துத்துணியில்லாம வந்திருக்கிறன்...'

'பிளேன்டியுடனும் புழுக்கொடியலுடனும் தான் கப்பலேறின்னான்... புழுக்கொடியல் இல்லாட்டி கப்பலில பட்டினியாக்கிடந்து செத்திருப்பன்...'

'ஏன் கப்பலில சாப்பாடு கொடுத்திருப்பாங்களே.?'



'கொடுத்தவங்கள்தான்.. என்னால அந்தச் சாப்பாட்டைத் தின்ன முடியுமே...நல்லவேளை. முந்திக் கொண்டு போயிருந்த புழுக்கொடியல் தான அந்தரத்துக்கு உதவிச்சு...'

'ஓமோம்... நானும்பிள்ளையளும்தான் வந்தனாங்கள் அவர் அங்கதான் வீட்டைப்பாத்துக் கொள்ளுறதுக்காக நிக்கிறார். இரவில தனியப் படுக்கப்பயமெண்டு அகதிமுகாமில போய்ப்படுக்கிறவர்... எங்கட சேமிப்பெல்லாம் அந்த வீடும் சாமான்களும்தான்...நாளைக்கு உவள் பெரியவளுக்கு ஏதும் சம்பந்தம் பேசிறதெண்டா அதுகளை வைச்சுத்தான் ஏதும் செய்யவேணும்......'

'ஓமோம்... இனி இந்தவயசுக்குப் பிறகு அவரால ஓடியாடிச் சம்பாதிக்க முடியுமே?...

—யாழ்ப்பாண நகரமே சாம்பல் பூசி நின்றது...அருணந்தியார் நெஞ்சப் படபடப்புடன் கைப்பையுடன் சாமான்கள் வாங்க தனது வாடிக்கைக் கடையை நோக்கி நடந்தார். கடைவாசலில் பெருங்கூட்டம்...சிலர் சாமான்களுடனும் சிலர் வெறும் பைகளுடனும் நகர்ந்து கொண்டிருந்தனர். முன்பு பார்த்தறியாத புதிய முகங்கள்...

பருப்புஇல்லை; அரிசிஇல்லை; தேங்காயெண்ணைஇல்லை; மாஇல்லை;... சீனிஇல்லை;.. மிளகாயஇல்லை.

'சம்பா தானிருக்கு கிலோ, பதினறுரூபா. பி. பி. சி ஓயில் இருக்கு நாப்பத்தெட்டுரூபா...எண்ணெ ரின் ஆறுநூறுரூபா...மீன்டின் இருபது ரூபா...' —அதிகம் போகாதிருந்த பொருட்களை அதிக விலையில வேகமாகத் தள்ளிக்கொண்டிருந்தனர். சனங்களும் ஏதாவது இப்ப கிடைக்குந்த... என்றபடி திருப்தியோடு சென்றனர்.

அருணந்தியார் கூட்டத்திற்கு எட்ட இருந்து எட்டி எட்டித் தன் தலையை முதலாளிக்கோ, சாமான் கட்டும் பையனுக்கோ காட்ட முனைந்து கொண்டிருந்தார். பையன் அவரை அடையாளம் கண்ட போதும் பில்லுக்குரிய சாமான்களைக் கட்ட முயன்று கொண்டிருந்தான. முதலாளியார் பணத்தை லாச்சியில் போடுவதில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தவர் தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

'அருணந்தியாரே; உள்ள வாரும்...உம்மைச்சந்திக்க வேண்டுமெண்டு நினைச்சனான்...எங்க நேரமிருக்கு நல்லவேளை நீரே வந்திட்டீர் ...தாரங்க...பக்கத்துக் கதவைத் திறந்துவிடு...'

அருணந்தியார் பக்கவழியால் உள்ளே போக, 'கணக்கப்பிள்ளை கொஞ்சநேரம் கல்லா மேசையையும் பாரும்... கொஞ்சநேரத்தில வாறன்' என்று எழுந்தார். வாரும் என்று பின்பக்கமாக கூட்டிப் போனார். அருணந்தியார் என்ன? ஏது? என்று புரியாமல் நடந்தார்.

## முன்னுக்குப் ...

... 8ம்பக்கத் தொடர்

உட்பட்டிருப்பதாலும் (ரகுநாதன் அவர்களுக்கு இந்த அவசியம் இல்லை) அந்தச்சர்ச்சையைத் தவிர்த்து விட்டு குறிப்பான ஒன்றைமட்டும் சொல்லிக் கொள்ளலாம். ‘மிகவும் நெருக்கடியான இந்தக்கட்டத்திலும் கூட வெகுஜன இயக்கத்தின் வேலை துணிவாகக் கிராமங்கள் தோறும் நடந்து வருகின்றன’ என்பதே. இதை அவரால் புரிந்து கொள்ள முடியாது தான். ஏனெனில் அவர் காலை பாடசாலை, மாலைவீடு என்று காலத்தைக் கழிப்பவர் ஆவார்.

இவருடைய இன்றைய நடைமுறை மேலே காட்டப்பட்ட எந்தச் சத்திய வேட்கைக்கு உடபட்டிருக்கிறதென்பதனை அவர் அதிகம் சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை. அவரின் கட்டுரையே சொல்கிறது.

அவருடைய இன்றைய இலக்கிய வேட்கை எந்தப் பககத்தில் நிற்கிற து?

அவருடைய செயல் பாடுகள் எந்த மாக்சிசக் கோட்பாட்டுக்குள் அடங்குகின்றன?

அவருடைய பேச்சும் எழுத்தும் எந்த வர்க்கத்துககுச் சேவை செய்கின்றன?

அவருடைய தொடர்புகள் எந்தத் தட்டு மக்களோடு இருக்கிறது?

அவருடைப நண்பர்கள் யார்?

வர்க்க முரண்பாட்டுக்கும், இன முரண்பாட்டுக்கும், சமூக முரண்பாட்டுககும் இவர் வைத்துக் கொண்டிருக்கும். இலக்கணங்கள் யாவை?

மேற்படி கேள்விகளைக் கேட்டுப்பார்த்து மக்கள் விடை காண்பார்கள்.

இவருடைய கட்டுரையைக் கொண்டு நானே உடனடியாகச் சில கேள்விகளை எழுப்பலாம். இதற்கு எனக்கு அதிகம் தமிழறிவுவேண்டியதுல்லை. எனக்கிருக்கும் அறிவுமட்டும் போதுமானது,

1) உங்களால் ‘கிலு கிலுப்பு நாவல்’ என்று கருதப்பட்ட பஞ்சமரை பொலிஷ் செய்து நூலுருப் பெறச் செய்தது எநதச்சத்திய வேட்கையோடு?

2) எனது முதலாவது சிறு கதைத் தொகுதியான ‘‘டானியல் கதைகள்’’ வெளி வந்த காலவரை என்னை எழுத்தாளஞக நீங்கள் அங்கீகரித்துள்ளீர்கள் என்பது உங்கள் கூற்றிலிருந்து தெளிவாகிறது. அப்படி உங்களால் அங்கீகரிக்கப்பட்ட என்னை யேசுராசா ‘‘நாங்கள் இன்றும் டானியலை எழுததாளர் என்று அங்கீகரிக்காத போது எப்படி இவர் சான்றோர் வரிசைக்குள் வந்தார்?’’ என்று கேள்வி எழுப்பியபோது ‘‘எடதம்பி ஏனடா இப்பிடி முட்டாள்தனமாக எழுதிஞய்?’’ என்று கேட்க உங்கள் சத்திய வேட்கைக்குத் துணிவு வராமல் ‘பொடியன்’ என்பது பற்றி மட்டும் கேட்கத்துணிவு வந்தது எந்த அடிப்படையில்?

3) வதிரி ஆ. ம. செல்லத்துரை பற்றி வீரகேசரியில் கட்டுரை எழுதினேன் என்கிறீர்கள். அவர்பற்றி ஒரு பேட்டியாளர் கேட்ட கேள்விக்கு மறுமொழியாக சில சொல்லியிருப்பேன். நிச்சயமாக அவரின சில நல்ல காரியங்களுடன் அவரின் நடவடிக்கைகள் பற்றித்தான் சொல்லியிருப்பேன். சரி நீங்கள் கூறியது போன்று கட்டுரை எழுதிஞல் கூட அதிலென்ன தவறு? சமூக ஒடுக்குமுறைகளினதும் வர்க்கத்தாக்கங்களினதும் காரணமாக தவிர்க்கமுடியாத முறையில் பின்னடைந்து நிற்கும் கீழ்வர்க்கத்தினரை அப்படியே கைவிடடுவிட வேண்டுமா?

‘வர்க்க அடிப்படையில், ஏறக்குறைய ஒருநிலைக்குட்பட்டவர்களை வென்றெடுக்கும் பணியை இன்றுவரை பிழையானது என்று நான் கருதவில்லை. புத்தகக்கட்டுகளையும் வெகுஜன இயக்கத்தாள்களையும் காவிக்கொண்டு வதிரிக்குக் காவடி எடுத்தேன் என்று கேலியும் கிண்டலும் செய்கிறீர்கள். அங்கிருந்த சிலரைத் தவிர மிகப்பலர் மாவிட்டபுரப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்பதை நினைத்துப்பார்க்க ஏன் மறுக்கிறீர்கள்?

4) ‘வெகுஜன இயக்கம் எனக்குக் கல்தா கொடுத்துவிட்டது என்று ஒரு புரளியைப் புதிதாகக்கிளப்புகிறீர்கள், வெகுஜன இயக்கம் இப்போது எப்படி இயங்குகிறது என்பதை பகிரங்கமாக எல்லோருக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்பது தான் உங்கள் விருப்பமா? இது எந்த வர்க்கத்திற்குச் சேவை செய்ய மேற்கொள்ளப்படும் சத்திய வேட்கை?

5) அந்தத்தோழர் அது செய்தார், இந்தத்தோழர் இந்தத் தியாகம் செய்தார் என்று கூறுகிறீர்கள்; உண்மை அதனால் நான் பெருமைப்படுகிறேன். அப்படிப்பட்ட தியாகங்கள் இலறி எதுவும் நடைபெருது என்பதில் எனக்கு அசையாத நம்பிககை. ஆனுல் மெத்தப்படிக்காத இந்தச் சிறிய பயலும் பலதடவைகள் தலைமறைவு வாழ்க்கையையும் பலமாதங்கள் சிறைவாழ்க்கையையும் அனுபவித்தான் என்ற உண்மையையும், சேர்த்துக்கொளள உங்கள் சத்திய வேட்கை இடந்தரவில்லையா?

தனது கட்டுரையின் இறுதிப்பகுதியில் மல்லிகை இதழில் கா. சிவத்தம்பி அவர்கள் எழுதிய ஒருகட்டுரையின் வார்த்தைத் தொடரைக் கொண்டு தனது வாதத்தை நிரூபிக்க இவர் முற்பட்டிருப்பது புரிகிறது வசகர்களின் ஆய்வுக்கே அதேவார்த்தைத் தொடரை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகிறது.

‘‘1950களில் இருந்த டானியல் அல்ல இன்றைய டானியல் ...பல மாற்றங்கள் ஆனுல் இந்த மாற்றங்களிடையே காணப்படும் ஒரு தொடர்புணர்வு......’’

‘மல்லிகை டிசம்பர் 8ம் இதழில் டானியல் பற்றி ஏகத்தாளமாக எழுதிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தன் மனச்சாட்சிககுச் சற்றே இணங்கிப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போலும் திக்கித்திணறி மேலே குறிப்பிடப்பட்ட வார்த்தைத் தொடரைப் பிரயோகித்திருக்கிருர் எனக்கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வார்த்தைத் தொடர் மூலம் சிவத்தம்பி எதனை விளங்கவைக்க முற்பட்டார் என்பதை உங்களால்தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனுல் ரகுநாதன் மாத்திரம் அதனை வேறுவிதமாகப் புரிந்து கொண்டிருக்கிருர்.

திரு. ரகுநாதனின் சத்திய வேட்கை இப்படி எல்லாம் செய்ய வைக்கிறது!

## கலாநிதி...

...9ம் பக்கத்தொடர்

இம் முயற்சியின் பலன் தொடர்ந்து கிடைக்கிறது எனும் பாவனையில் தேவதைகள் வடிவில் மேகங்கள் கருக்கொள்கிறது. அதாவது தேவதைகள் பாணியில் ஒப்பனை செய்யப்பட்ட பெண்கள் கூட்டம் மேடையை சுற்றி அணிவகுக்கிறது. தொடர்ந்து காற்று அடிக்கிறது, மழை பொழிகிறது. மழையாக நன்கு அலங்காரமிடப்பட்ட பெண்கள் மேடையில் சுழன்று ஆடி கதகளி நடனம் புரிகின்ருர்கள். பின்னணியில் பாரதியாரின் ‘‘திக்குகள் எட்டும் சிதறி’’ எனும் பாடலைப்பாட கதகளி நடனம் மழை பொழியும் காட்சியை தததுவரூபப்படுத்துகிறது. அத்துடன் மேகம், மழை ஆக நடித்தவர்கள் மேடையை விட்டு அகல, மக்கள் மகிழ்ச்சி வெளிப்படுத்தப் படுகிறது. மனிதக் கூட்டத்தின் முயற்சி ‘மழை’ எனும் தீர்வாகியது. அம்மகிழச்சி நீலாவணனின் கவிதையில் பாடலாக பின்னணியில் ஒலிக்கிறது.

மழை பொழிந்தவுடன் மக்கள் சும்மா இருக்கவில்லை நிலத்தை உழுகிருர்கள. நெல் விதைக்கிருர்கள், களைபிடுங்கி பசளை இடுகிருர்கள் அறுவடை செய்கன்ருாகள் மூட்டைகட்டி வீடு எடுத்து செல்கிருர்கள் பொங்கல் செய்து மகிழ்கிருர்கள். இவ்வளவும் மேடையில் நிகழ்வுகளாகக் காட்டப்படுகின்றன. பின்னணியில பாடகர்களும் இசைக் குழுவும் நிகழ்வுகளை விளக்குகிருர்கள். இந்நிகழ்வுகளில் கதை சொல்பவனும பங்கு கொள்கிருன். மறறைய மூவரும் மேடை ஓரத்தில் நின்று பாடகர்களுடன் பாடுகிருர்கள். அவர்கள் பணி சிறிது குறைவு போலத் தெனபடுகிறது. இறுதியில் பாடகர்கள் நடிகர்கள், கதைசொல்வோர் சகலரும் மேடையில் கூடி வணககம் சொல்வதுடன் நாடகம் இனிது நிறைவேறியது.

கண்கவர் ஆடையலங்காரங்களுடனும், நுட்பமாள காட்சி அமைப்புகளுடன், கனிவான இசையுடனும், கருத்தும் பொருத்தமும நிறைநத கவிதைகளுடன், காத்திரமான மேடை நடிப்பு, நிகழ்வுகளுடனும், பலே, நாட்டுக்கூத்து, கதகளி, பரதம் ஆகிய பல் வகைப்பட்ட ஆட்டமுறைகளுடன் சிறந்து விளங்கும் இந்நாடகம் ‘வடிவு’ கருத்தாழமுள்ள நடைமுறையும் நிரந்தரமும் பொதிந்த கருவுடனும கதையுடனும் ஒரு சிறபபான மதிப்பீட்டை பெறு பார்வையாளர்களிடமிருந்து இந்நாடகம் காலம் காலமாக நின்று பிடிக்கக்கூடிய கருவைக் கொண்டிருப்பதால் போதும் நிகழ்கால பிரச்சினைகளும் ஒரு தீர்வை கோடிகாட்டுகிறது. இந்நாடகத்தை பரவலாக பாடசாலைகளிலாவது மேடையேறறுதல் மக்களின் கலையார்வத்தையும், ரசனையையும மேலும் வளப்படுத்த வழிகோலும்.

## மழை....

(...10ம் பக்கத்தொடர்

முகத்தைத் தன் கைகளால் மூடிக்கொண்டு அழுதாள்.

‘தலைவனின் மகளே, அழாதே. நாம் ஓடுவோம் எம்மைக் காப்பாற்றிக் கொள்வோம்.’

தொலைவிலே மின்னற் கீறு ஒன்று மேகத்தைக் கீறிக் கொண்டு வெளிப்பட்டது. அவர்கள் அச்சத்துடன் மேலே பார்த்தார்கள்.

அன்றிரவு மழை சோனு வாரியாகப் பொழிந்தது.

மழை வந்துவிட்டது!

### சிறுவர் கதை அமுதம்




ஏழை ஓவியன் எழில், அவ்வூரின்
‘செல்வ மகளாம் சீதையை வரைந்தால்,
நல்ல பரிசு வரும்’ என நம்பி,
எண்ணிய படியே அச்சீமாட்டியை
வண்ண ஓவியமாய் வடித்தும் விட்டான்.
அரண்மனை போன்ற அவள் மனைக்குப்
பெருமையுடன் அப் படத்துடன் சென்ருன்!
ஆயினும் அந்தப் படத்தில்,
சீதையின் உருவம் பாதியும் இல்லை!
என்று சிலர் அதை இகழ்ந்தனர். சிலர் அதை
நன்று நன்றெனப் புகழ்ந்தனர்! இதனுல்
தீர்ப்பு வழங்கும் தேவை ஏற்பட
‘நடுவர் யார்’ எனவும் அடிபட நேர்ந்ததாம்!
பொடியர் எனப்படும் புத்திமான் எழுந்து
‘‘நமது தீர்ப்போ நடுநிலையற்றது
நாயின் தீர்ப்பே நல்லது’’ என்ருராம்!
தாயைப் போன்ற சீதையார் எழுந்து
‘‘ஓவியக் கலைஞரே என்றன் உருவம்
படத்திலே அச்சொட்டாக இருந்தால்
இடத்திலே அவிழ்ந்து விடப்படும் எனது நாய்,
படத்தை நோக்கிப் பாய்ந்து வந்திடும்!
வாலை ஆட்டும்; காலையும் நக்கும்
இன்று போய் நாளை வாரும்’’ என்ருளாம்!
அறிவு மிக்க வறிய ஓவியன்
பொறுமையுடன் போய் மீண்டும் அப்படத்தை
‘போட்டிக் குரியதாய்ப் புதுக்கி’ வைத்தானும்!
அடுத்தநாள் அதனை எடுத்துச் செல்ல
சீதை மனையிலே இருந்த மேதையர்,
படத்தை வைத்த இடத்திலே, சீதை
வளர்த்த நாயை அவிழ்த்து விட்டனர்.
படத்தை நோக்கிப் பாய்ந்த நாயோ
வாலையாட்டியும் வளைய வந்தும்
பலமுறை படத்தை மோப்பம் பிடித்தபின்
நாவால் படத்தை நக்கவும் தொடங்க
ஓவியம் இதிலே உயிர் உண்டென்று
யாவரும் மொழிந்து பரிசும் நல்கினர்!
ஆயினும் அந்த ஓவியன், தனக்குள்
‘பன்றிக் கொழுப்பே நன்றி’ என்றனன்!
நன்றிக் குரியது பன்றிக் கொழுப்பே?

★ கவிஞர்: பா. சத்தியசீலன்

## யேசுராசாவை....

(...8ம் பக்கத்தொடர்)

யேதும் செய்திருக்கிருரா? அப்படியானுல் இவரின் அடுத்துவரும் இதழ்களிலாவது அவைகளில் ஏதாவது ஒன்றினை மறுபிரசுரம் செய்து தனது இலக்கிய ஆய்வு நெறியினை வெளிக்கொண்டு வரட்டுமே!

என்னிடமிருந்து தனது கதைகளை எடுத்துச் சென்ற காலம், ஏறக்குறைய இவருடைய அலையின் பிறப்புக் காலத்தோடு ஒட்டிவருமெனில் அவைகளில் வெளியான கேலியும் கிண்டலுமான விமர்சனத் துணுக்குகளிலிருந்து பார்த்தால், இவரது உண்மை மனப்போக்கைக் காணமுடியும்.

அவர் குறிப்பிட்டுக் காட்ட முனைவதுபோல அவர்மீது வஞ்சம் தீர்க்கும் அவசியம் ஒன்றும் எனக்கு ஏற்பட ஏதுக்கள் இல்லை. அவருடைய பெருந்தலைவீக்க சின்னப்பிள்ளைத்தனத்தின் தொடர்ச்சிதான் ‘‘டானியலை இன்னும் நாங்கள் எழுத்தாளராகக் கூட அங்கீகரிக்காத நிலையில் இவர் எப்படிச் சான்றோர் வரிசைக்குட்படுத்தப்பட்டார்’’ என்ற விதத்தில் அலை மூலம் கேள்வியைக் கேட்க வைத்திருக்கிறது. இந்தத் தனத்தை வளரவிடுவது பொதுவில் இலக்கிய உலகுக்கு நஷ்டமான தென்பதாலேயே ‘‘கிராமிய வழக்குக்குட்பட்ட இந்தப் ‘‘பொடியன்’’ என்ற பதம் இவருக்கு மிக பொருத்தமானதென்பதை இவருடன் கூட்டமைத்துக் கொண்டிருக்கும் ஓரிருவரைத் தவிர ஏனையோர்கள் ஒப்புக்கொள்வர்.

‘‘டானியலின் வீடே தெரியாது, வீட்டுப்பக்கம் போனதில்லை’’ என்று மறுக்கும் இந்தப் பொடியன் தனத்தை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது.

## மேடை....

7ம் பக்கத் தொடர்

வட்டத்தில் அளவான முறையில் இசை நடன நிகழ்ச்சிகளைக் கூட இக்குழு இலகுவில் நடத்தமுடியும். துறைபோகிய பாடகர்கள் பக்கவாத்தியகாரர் பலர் ஆசிரியர்களாய் இருப்பதை நன்கு பயன்படுத்தலாம் அல்லவா? கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்பையும் பெருமையையும் நல்குவதுடன், சுவைஞர்கள் தரத்திறத்தினையும் அறிவினையும் வளர்த்திடலாம் அல்லவா?

ஈழமுரசு

# தளபதி சிறில் ரணதுங்கா நேற்று வவுனியாவிற்குத் திடீர் விஜயம்

(வவுனியா)

கூட்டுப் படைகளின் பிரதம தளபதியான ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்று வவுனியாவிற்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். பாவற்குளம் ஏழாம், எட்டாம் யூனிட் பகுதியிலிருந்து வெளியேறிய சிங்களக் குடிமக்களை இங்கு மீண்டும் குடியேற்றுவது பற்றி இவர் மாநாடொன்றை நடத்தினர். பின்னர் வவுனியாப் பகுதி உயர் அதிகாரிகள் சகிதம் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தார். சுமார் 1500 பேர் இப் பகுதியிலிருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

★ யாழ்ப்பாணத் தமிழரைத் தேடியபின்னர்

# கொழும்பு மினிபஸ்ஸில் சென்ற சிங்கள, முஸ்லிம் பயணிகளிடம் கொள்ளையரின் கைவரிசை!

(கொழும்பு)

அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற தனியார் பஸ் ஒன்று சிலாபத்துக்கு அண்மையிலுள்ள கந்துல ஓயா என்ற இடத்தில் காடையர் கோஷ்டியொன்றினால் வழிமறிக்கப்பட்டு, பயணிகளிடமிருந்த பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதயான நகைள், பொருட்கள் ஆகியவற்றுடன் பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கிகள், கத்திகள், பொல்லுகள சகிதம் வழிமறிக்கப்பட்டு, அடர்ந்த காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு, உள்ளேயிருந்த இருபத்தாறு பயணிகளும நிலத்தில் குப்புறப் படுக்க வைக்கப்பட்ட பின்னரே அவர்களது உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டனவாம்.

"யாழ்ப்பாணத் தமிழர் யாராவது இருக்கின்றீர்களா?" என்று முதலில் கேட்கப்பட்ட பினனரே, அனைவரும் படுக்க வைக்கப்பட்டனராம். பஸ்ஸில் இருந்தவர்களில் 24 பேர் சிங்களவர் என்பதும், மிகுதி இருவரும் முஸ்லிம்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக பிரசித்திபெற்ற கொள்ளையர் கோஷ்டியொன்றை சிலாபம் பொலிஸார் தேடிவருகின்றனர்.

## அரியாலை மக்கள் பணிக்கு உ. அரச அதிபர் பாராட்டு

(அரியாலை)

"நல்லூர் உதவி அரசாங்கப் பிரிவில் செயல்படும் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் மிகத் திறம்பட செயற்பட்டு வருகிறது. அரசாங்கம் வழங்கும் இபபத்தாயிரம் ரூபா நன்கொடைப் பணத்தை இச்சங்கம் நல்ல முறையில பயன்படுத்த வேண்டும். அரியாலை மக்களைப் பற்றி எனக்குத் தெரியும், இப் பணத்தினல் யுவதிகட்கு வேலை வாய்பபும், தரமான பப்பட்த் தயாரிபபும் இங்கு ஏற்படும்"

இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. இ.சிவகுருநாதன் அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கக் கைத் தொழில அபிவிருத்தி அங்குரார்பபண வைபவததில் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டார். இவ் வைபவம அரியாலை மாம்டழம் சந்திச் சங்க மண்டபத்தில நடைபெற்றது. திருமதி பா. வேலமுருகு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தை யாழ். செயலக தலைமைப் பீட சிரேஷ்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். கோபாலரத்தினம் விளக்கேற்றி ஆரமபிதது வைத்தார் திரு. எஸ். கோபாலரத்தினம் உரையாற்றுகையில்;- "சிறு கைத் தொழில்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். நிதி, மூலவளம் குறைந்த எங்கள் பிரதேச மக்கள் தங்கள்முன்னேற்றத்திற்கு சிறு கைத் தொழிலகளை நமபி இருக்க வேண்டும். எங்கள் பிரதேசத்தில் சிறு கைத் தொழிலகளை வளர்ப்பதன் மூலம், பொருளாதாரசுபீட்சத்திற்கு ஓரளவு பங்களிப்பைச் செய்தவர்களாவோம். இத்துடன் நின்றுவிடாது பாரிய கைத தொழிலகளையும் செய்ய வேண்டும்" என்றார்.

தமிழ் மகளிர் அவைப் பேச்சாளர் திரு. இரா.முருகையா, திருமதி எஸ். பாலசுபபிரமணியம, திரு. ந. சோமசுந்தர ஐயர், கலாநிதி சு. மோகனதாஸ், திரு. எஸ். கருணைநாதன், திரு. ஆ. கனகசபாபதி, வண. பிதா ஜோசப் அடிகள் ஆகியோரும் உரையாற்றினர்கள். கிராம அபிவிருததிச் சங்க சார்பில் திருமதி. நா. பாலசிங்கமும், தமிழ் மகளிர் அவை சார்பில் செல்வி கே. மஞ்சுளாவும் நன்றியுரை வழஙகினர்கள்.

## மிருசுவிலில் இன்று ஒளிவிழா

மிருசுவில் புனித நிக்கிலார் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மிருசுவில் பங்குத்தந்தை அருள் திரு. அமிர்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இப் பகுதியைச் சேர்ந்த பல பாடசாலைகள் கழகங்கள் என்பன வழங்கும் கலை நிகழ்ச்சிகளுடன்மறை அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கலும் இடம்பெறும்.

## இருவர் கைது

(திருமலை)

மூதூரில் விசேஷ அடையால அட்டை பெறச் சென்ற ஏ. திருமூர்த்தி, எஸ். ஆரோககியநாதர் ஆகிய இருவரும் நேற்று ராணுவத்தினால கைது செய்யப்பட்டனா.

## அனைவரும் விடுதலை

ஆரையம்பதியில் நேற்று முன்தினம் கைதான பதினைந்து இளைஞர்களும் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டனர்.

2 பெண்களுக்கு ...

னுக்கும் ஏற்கனவே இதே குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அவசர....

கள் நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவிலுள்ள பிரஜைகள் குழுக்களின் காரியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அகதிகள் மறுப்பு

(நெடுங்கேணி)

நெடுங்கேணியிலுள்ள அகதி முகாமகளில் தங்கயிருப்போர் டிசம்பர் மாதம 31ம திகதிக்கு முன் தத்தமது இடங்களுககு மீள செல்லுமாறு அரசாங்க அதிகாரிகளினால் பணிப்புரை வழங்கபபட்டுவளது. எனினும நெடுங்கேணிப் பகுதியிலுள்ள செட்டிகுளத்தைச் சேர்நத அகதிகள் மீணடும் தமது பழைய இடங்களுககுச் செலல மறுபபுத தெரிவிததுள்ளனர்.

மட்டக்களப்பு....

கைதான, விடுதலையான இளைஞர்களின் எண்ணிக்கையிலேயே இவ் வேறுபாடு காணப்படுவதாகவும குழுவின் அறிக்கையில் தெரிவககபபட்டுள்ளது.

பிரஜைகள் குழுவின் செயலாளர், கைதான இளைஞர்களின் பட்டியலை உடனடியாகவே இராணுவ அதிகாரிக்கு சமர்ப்பிததிருந்தால் இப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. அரசாங்க அதிபருக்கு கைது செய்யப்பட்டவர்களின் விபரங்கள், எப்போது கைதானர், எங்கே கைதானர் என்ற விபரங்கள் படையினரால் அறிவிக்கப்பட்டிருந்தால் அவர்களைபபற்றிய விபரங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருநதிருக்குமென வும அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

கண்காணிப்புக்குழு சமர்ப்பித்துள்ள மூன்றாவது அறிக்கையில அக்டோபர் மாதம் 20-ம் திகதிக்கும் இம்மாதம் 10-ம் திகதுககும் இடையே இடமபெற்ற கண்ணிவெடித் தாக்குதலகள பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவகளில் 44 பாதுகாப்புப் படையினர் உட்பட 78 பேர் மொத்தமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் 23 தீவிரவாதிகளும், 11 பொது மக்களும் அடங்குவர். இக்காலததில எல்லாமாக இருபத்தைந்து கண்ணிவெடித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்புப்படையினரின் பத்து வாகனங்களும் இதனால் சேதமடைந்துள்ளன.

இவ்வாறான கண்ணிவெடிச் சம்பவங்கள் யுத்த நிறுத்த மீறல்களே எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் எவரும்

## நாடு கடத்தப்படுவதை அனுமதிக்கத் தயாரில்லை

### ஈரோஸ் அறிக்கை தரும் தகவல்

காடுமேடாகக் கிடந்த மலையகத்தைத் திருத்தி, வளங்கொழிக்கும் பூமியாக மலரச் செய்த மக்கள் இந்த மண்ணிலேயே வாழ விரும்புகின்றனர். ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் எட்டு லட்சம் பேர் இங்கேயே வாழ விண்ணப்பித்துள்ளனர். ஆனால் பலவந்தமாகவும், அச்சுறுத்தலுக்கூடாகவும் நான்கு லடசம் பேரை இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது என்று ஈரோஸ் அமைபபு விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிததுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- நாடற்றவராக்கப்பட்ட மக்களுக்காக அண்மையில் தேசிய துக்க தினத்தை நினைவு கூர்ந்த ஈரோஸ் அமைப்பினராகிய நாம், மலையகத்து மக்களால் வளம்படுத்தப்பட்ட மண்ணை அவர்களது உடமையாக மாற்றும் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்ததோடு, தொடர்ந்தும் இவர்கள் நாடு கடத்தப்படுவதை அனுமதிக்காதிருக்கும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை வலியுறுத்திக் கேட்டிருந்தோம்.

இந்தப் பின்னணியில் மலையக மக்களின் கட்டாய நாடு கடத்தலை ஏற்றுக்கொள்ள ராஜதந்திர ரீதியில் இந்தியா மறுததுள்ளமையினை செங்குவாக மதிக்கிறோம; பாராட்டுகிறோம். கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் மலையகததில் உழைக்கும் மக்களை - இநதிய வம்சாவழியினர் என்றும், இந்தியப் பிரசைகள் என்றும் கூறி அவர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளும். ஆனல் அதற்கு முன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும என்க் கூறுவது கவலை தருகின்றது.

நாடற்றவர் என ஒரு சாரார் இருக்கும் வரையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது என்றுமில்லை எனபதை அழுத்திக் கூறுவதோடு, தமிழ் பேசும் மக்கள் எவரும் எந்த வகையிலும் எந்தச் சூழ்நிலையிலும் நாடு கடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## நடைபாதை வியாபாரம் விபத்துக்கு ஒரு காரணம்

யாழ். ஆஸ்பத்திரிக்கு அன்றாடம் வந்து செல்லும் நோயாளிகளும பொது மக்களும் பாவிக்கும் நடைபாதையை அங்காடி வியாபாரிகள் முற்றாக ஆக்கிரமித்திருப்பதால் மக்கள் வீண் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதாகவும் விபத்துக்களும் அடிக்கடி நிகழ்வதாகவும் 'ஈழ மக்கள்' என்ற பெயரில் இப் பகுதிகளில் ஒட்டப்பட்டுளள சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சகல இயக்கங்களுக்கும் ஓர் அவசர வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள இச் சுவரொட்டிகளில், இதனால் கடந்த 13-ம் திகதி இளம் பெண் ஒருவர் விபத்தில் சிக்கி மரணமடைந்ததும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஆஸபத்திரி மதிலை ஒட்டிய நடைபாதையில் வியாபாரம் செய்பவர்களை அப்புறப் படுத்தி இப்பகுதியில் இனிமேல் வியாபாரம் செய்யக் கூடாது என அறிவிக்க வேண்டும் எனவும் இதில் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பொலிஸாரே இதனைக் கவலித்தார்கள் இனிமேல் யார் இதனைக் கவனிபபது? எனவும் இங்கு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மூதூரில்....

இருவரையும் கற்பழித்து விட்டு, நீரோடை ஒன்றுக்குள் செல்லுமாறு கூறிவிட்டு சுட்டதாகவும் தெரிவித்தார்.

இவரது தம்பியான ஜேசுதாசனுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னமும் தெரிய வரவில்லை. இது தொடர்பாக இதுவரை ஐந்து ஊர்காவற் படையினர் கைதானதாகத் தெரியவந்துள்ளது.

ஈழப்போரை....

'மகாபொல' புலமைப் பரிசில் சம்பந்தமான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் தான் மேற்கொள்ளவுள்ள இவ் ஐநது வழி முறைகளையும் விபரித்தார்.

ஆயுதப் படைகளை மேலும் வலுபபடுத்தல், படையினருக்குக் கூடுதலான ஆயுதங்களை வழங்குதல், சர்வதேச அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாகத் திருப்புதல், தீவிரவாதிகள் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்திற்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தல், நிலைமையை விளக்கி தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராட திடசங்கற்பம் பூணல் ஆகியவையே அமைச்சரால் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும்.

பொலிஸில்...

மான முறையில் இவர் தப்பிச் சென்றுவிட்டார்.

பின்னர் இவர் புளியங்குளத்தில் வைத்து சில இளைஞர்களால் கைதானதாகத் தெரியவருகிறது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 29-12-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23836